Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

தினமுரசு

THINAMURASU

Admission open
No Prior Qualifications
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
BIT-Degree University of Colombo
20000 Rs only 1st Year
CIMA-UK
14000 Rs. only
founation level Course fee
Computer Engineering - USA
Government Scholorship USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Free :BCS-UK, IELTS, Hardware, ICDL
(C/934)
MCS
Supported By UNDP/JRRP
SMS your name & course to 772 395 895 & Get Schol.
324,Palaly Road,Parameswara Junction

முரசு - 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 | ஆவணி 16 | வெள்ளிக்கிழமை | (02.09.2011) | பக்கங்கள் 16 | ஓசை - 338



இரண்டு வழிகளில் முயற்சி (08)



வென்றது ஜொலிஸ்ரார் (07)



இந்துக் கடவுளை அவமதித்தாரா? (12)




விக்கிலீக்ஸ் மீது சைபர் தாக்குதல் (13)

# குடிசனம் மீது தாக்குதல் உடைமைகளுக்குச் சேதம்

## குருநகரில் நேற்று இரவு பதற்றம்





(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகர்ப் பகுதியில் மர்ம மனிதன் பீதியால் ஏற்பட்ட பதற்றம் காரணமாக அப்பகுதிப் பொதுமக்களுக்கும், படைத்தரப்பினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

இம்முறுகல் முற்றியதில் பொதுமக்கள் மீது படையினர் சகட்டு மேனிக்குத் தாக்குதல் நடாத்தினர். இத்தாக்குதலில் பொதுமக்கள் பலர் காயமடைந்ததுடன், பொதுமக்களின் வாகனங்கள் மற்றும் உடைமைகளுக்கும், சொத்துக்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

நேற்று இரவு எட்டு மணியளவில் குருநகர் சின்னக்கடைப் பகுதியில் மூன்று மர்ம மனிதர்களின் நடமாட்டம் பொது மக்களால் அவதானிக்கப்பட்டதைத் தொடர்ந்து விழிப்படைந்து ஒன்று திரண்ட அப்பகுதிப் பொதுமக்கள் மர்ம மனிதர்களைத் துரத்தியடித்துள்ளனர். தப்பியோடிய மர்ம மனிதர்கள் கடற்கரை வீதியூடாக ஓடிச் சென்று தலை மறைவாகி விட்டனர். தொடர்ந்து திடீரென அப்பகுதிக்குள் படையினர் பெரும் எடுப்பில் பிரவேசித்து மர்ம மனிதர்களைத் துரத்திச் சென்ற பொதுமக்கள் மீது தாக்கத் தொடங்கினர். பொல்லுகள், தடிகள் கொண்டு பொது மக்கள் மீது படையினர் தாக்கத் தொடங்கியதும் அப்பகுதியில் பதற்றம் பல் மடங்கு அதிகரித்தது. பொதுமக்கள் நாலா புறமும் சிதறி ஓடினர். வீதியில் இராணுவ கனரக வாகனங்கள் பேரிரைச்சலுடன் விரைந்து கொண்டிருந்தன.

மக்களின் அலறல் ஒலிகளும், தெரு நாய்களின் குரைக்கும் ஒலிகளும் இணைந்து அப்பகுதியிலிருந்து ஒரு வகையான இரைச்சல் ஓசை எழுந்த வண்ணம் இருந்தது. படைச்சிப்பாய்கள் கையில் கொட்டண்களுடன் ஓட்டமும் (15ஆம் பக்கம் பார்க்க)

## இணுவில் குடும்பஸ்தர் மன்னாரில் வெட்டிக் கொலை



மன்னாரில் கடை உரிமையாளர் ஒருவர் தனது கடைக்குள்ளேயே வைத்து இனம் தெரியாத நபர்களினால் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் ஆண்டான்குளம் வீதி ஆக்காட்டிவெளி கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. கொலை செய்யப்பட்டவர் இணுவிலைச் சேர்ந்த குடும்பஸ்தரான கனகரத்தினம் மகேந்திரன் (வயது 42) என விடத்தல்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் பதில் நீதவான் எம்.எம். சபூர்தின் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டார். இதன் போது கொலையாளி கடைக்கு பின்புறமாக வந்து (15ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.கலட்டியில் மர்ம மனிதன் பீதி நாவாந்துறைப் பாணியில் தாக்குதல்

## அறுவர் காயம், நொருங்கியது பஸ் வண்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கலட்டிப் பகுதியில் பிரவேசித்த மர்ம மனிதனைத் துரத்திச்சென்ற உள்ளூர் இளைஞர்கள் மீது நாவாந்துறைப் பாணியில் தாக்குதல் நடாத்தப்பட்டிருக்கிறது.

நேற்று முன்தினம் நடந்த இச் சம்பவத்தின் போது மர்ம மனிதனை விரட்டியவர்கள் மீது அப் பகுதிக்கு விரைந்து வந்த பொலிஸார் கடுமையாகத் தாக்குதல் மேற்கொண்டனர். இத் தாக்குலில் படுகாயமடைந்த ஆறு பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். அத்துடன், இவர்கள் அனைவரும் நேற்றுக்காலை யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவில் கொக்குவில் பிரதேசத்தில் நடமாடிய கிறிஸ் மனிதன் ஒருவனை மேற்படி பிரதேச இளைஞர்கள் துரத்திச்சென்ற போது தப்பியோடிய கிறிஸ் மனிதன் சுற்றுலா பேருந்தில் உள் நுழைந்து ஒளிந்துள்ளதைத் தொடர்ந்து இதனை அவதானித்த அப்பிரதேச இளைஞர்கள் குறித்த பஸ்ஸை அடித்துச் சேதப்படுத்தினர்.

இதன்போது சம்பவம் தொடர்பாக பஸ் சாரதி, நடத்துநர் பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அங்கு பஸ்ஸை சேதப்படுத்திய குறித்த இளைஞர்களை அடித்துக் காயப்படுத்தியதுடன் 6 பேரைக் கைது செய்துள்ளனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய அரசின் உதவிகள் மக்களுக்கு எட்டாக்கனி

## கூட்டமைப்பு எம்.பி.சாடல்

(சென்னை)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களுக்கு இந்தியா வழங்கிய உதவித்திட்டங்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடையவில்லை என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்துள்ளார்.

இந்தியா சென்றுள்ள அவர், அங்கு செய்தியாளர்களை சந்தித்து பேசும் போது இதனை குறிப்பிட்டதாக, இந்திய இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தக்குற்றக் காணொளி சனல் - 04க்கு விற்பனை

## வலுவடையும் கொலை அச்சுறுத்தல்

வன்னியில் நடந்த இறுதி போரின் போது, ரூபவாகினி ஒளிப்பதிவாளரான சமன்குமார ராமவிக்கிரம போர்முனைச் செய்தி சேகரிப்புக்காக இலங்கைப் படையினருடன் தங்கியிருந்தார். அவரே இலங்கைப் படையினரின் போர்க்குற்றக் காட்சிகள் பலவற்றை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்றதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட காணொளிக் காட்சிகளே சனல்-04 தொலைக் காட்சியால் வெளியிடப்பட்டிருக்கிறது என்று தற்போது தெரியவந்திருக்கிறது.


இந்தநிலையிலேயே தன்னைக் கொலை செய்வதற்கு பாதுகாப்புத் தரப்பிலுள்ள சிலர் திட்டமிடப்பட்டுள்ளதாக கப்டன் ஜெயவீர என்ற இராணுவ அதிகாரி தன்னிடம் தெரிவித்துள்ளதாகவும் சமன்குமார ராமவிக்கிரம ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் கூறியுள்ளார் என ஆங்கில இணைய தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரகுமார் எம்.பி நடவடிக்கை

குருநகரில் நேற்று இரவு இடம்பெற்ற சம்பவத்தால் அப் பகுதியில் தோன்றிய பதற்றம் தொடர்பாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சந்திரகுமார் யாழ். உதவிப் பொலிஸ் மா அதிபர் நீல் தளுவத்தவுடன் (15ஆம் பக்கம் பார்க்க)

# மர்ம மனிதனுக்கு விளக்கமறியல்




(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலில் தில்லையம்பதி சிவாகாமி அம்மன் கோவிலுக்கு அண்மையில் உள்ள வீடொன்றினுள் நேற்று முன்தினம் இரவு நுழைந்த பின்பக்க யன்னல் வழியாக எட்டிப் பார்த்த கிறிஸ் மனிதன் எனச் சந்தேகிக்கப்படும் கொழும்பு காவத்தைப் பகுதியைச் சேர்ந்த ரி.டி.தனஞ்சே (வயது-20) என்பவரை நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியதை அடுத்து எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், மனோநிலை வைத்திய அதிகாரியின் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் யாழ்.நீதிமன்ற நீதிபதி ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டார்.

மேற்படி சந்தேகநபர் ஒரு மனநோயாளி எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளதால் மேற்படி விடயத்தைக் கருத்தில் கொண்ட நீதிவான் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார். (எப்.எஸ்,எஸ்)

# அதிகரிக்கிறது நாய்களின் தொல்லை யாழில் 12 ஆயிரம் பேருக்கு சிகிச்சை



(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இவ்வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 12 ஆயிரம் பேர் நாய்க் கடிக்கு ஆளாகியுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதாரப் பணிமனையின் விலங்கு விசர் நோய் தடுப்பு அதிகாரி கே.வர்ணநாதன் தெரிவித்தார்.

இவர்களில் ஒருவர் விலங்கு விசர் நோய் என சந்தேகத்துக்கிடமான முறையில் இறந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்ற யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாக அதிகரித்துவரும் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

எதிர்வரும் 28 ஆம் திகதி விலங்கு விசர் நோய் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதனை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக கட்டுரைப் போட்டி ஒன்று நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

'விலங்கு விசர் நோய் தினம் செப்ரெம்பர் - 28' என்ற தொனிப்பொருளின் கீழ் மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி இடம்பெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும்.

மேலும் யாழ். குடாநாட்டில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி, கருத்தடைச் சிகிச்சை, கருத்தடை ஊசி என்பன ஒவ்வொரு பிரதேச சுகாதார நிலையங்களூடாக வழங்கப்பட்டு வருகிறது.

விலங்கு விசர் நோய் தொடர்பாக ஒவ்வொரு பிரதேச சுகாதார நிலையங்களும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வுகளை வழங்கவேண்டும். அத்துடன் பொதுமக்களும் அவர்களுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் இந்த நோயிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (பா)

# அச்சுவேலி விபத்து தாயும் மகனும் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பகுதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் தாயும் மகனும் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் பிரதான வீதிக்கு வரும்போது பிரதான வீதியால் வேகமாக வந்த ஹயஸ் வான் இவர்களை மோதியது.

மேற்படி விபத்தினால் படுகாயமடைந்த பெண் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். எனினும் மேலதிக அவசர சிகிச்சைக்காக அவர் கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எப்.எஸ்)

# சிவசக்தி மணிமண்டப 8 ஆவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆவரங்கால் பகுதியில் அமைந்துள்ள சிவசக்தி மணி மண்டபம் தனது எட்டாவது அகவை நிறைவினை முன்னிட்டு அறக்கொடை விழா 04.09.2011 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சிவசக்தி மண்டபத்தில் நடத்துகின்றது.

இந்நிகழ்விற்கு சிவசக்தி மணி மண்டப நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை செயலாளரும் தலைவருமான வே.கந்தசாமி தலைமை தாங்குகின்றார். யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா பிரதம விருந்தினராகவும், செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்கின்றனர்.

'குற்றவாளிக் கூண்டில் யாழ்ப்பாணப் பெற்றோர் எனும் தலைப்பில் நிகழ்வின் இறுதியில் சிறப்புக் கலை வழக்காடு மன்றம் ஒன்றும் இடம்பெறவுள்ளது.

(எப்.எஸ்)

# உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி

(கொழும்பு)

சிந்தனைக்கூடம் - யாழ்ப்பாணம் எனும் ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனம் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் உள்ளூராட்சி சபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பயன்பெறும் பொருட்டு இருநாள் பயிற்சிப் பட்டறைகளை வலய ரீதியாக நடத்தவுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கி வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் வசதியான கருத்தரங்கு மண்டபங்களில் மேற்படி இரு நாள் பயிற்சிப் பட்டறைகள் தொடர்ச்சியாக இடம்பெற ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

இலங்கையில் உள்ளூராட்சி முறைகள், ஒழுங்கமைப்புகள், சட்டப்பாதிப்பு, பொறுப்புக் கூறல், உள்ளூராட்சி அதிகாரங்கள், உறுப்பினரது கடமையும், பொறுப்புகளும், நிதி முகாமைத்துவம், உள்ளூராட்சியும் நல் ஆளுகையும், தத்தமது பிரதேசங்களுக்கு கிடைக்கும் வளங்களை இனங்காணலும், பயன்பாடும், விவசாய, கால்நடை, மீன்பிடி, அபிவிருத்தி, பனைவளப் பயன்பாடு, கைத்தொழில் விருத்தி, நூலக அபிவிருத்தி, மரபுரிமைச் சொத்துக்களைப் பேணுதல், சூழலைப் பேணுதல், சுக நலனை மேம்படுத்துதல் போன்ற தலைப்புகளில் உரைகளும், கலந்துரையாடல்களும் இடம்பெறவுள்ளன.

கட்சிபேதமின்றி எமது உள்ளூராட்சி உறுப்பினர்கள் அனைவரும் அழைக்கப்படுவர் எனவும் மேலதிக தகவலைப் பெறுவதற்கும், ஆலோசனை வழங்குவதற்கும் தொலைபேசி இல 021 222 3274 உடன் தொடர்பு கொள்ளும் படியும் கேட்டுக்கொண்டுள்ளது.

## வருடாந்த மஹோற்சவம்

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை ஸ்ரீ வரத விக்கின விநாயக சம்பந்தப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி இரதோற்சவமும், 11 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (104)

# கடற்தொழில் மகா சம்மேளனம் உருவாக்க விசேட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

அனைத்து கடற்தொழில் மாவட்டங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் கடற்தொழில் மகா சம்மேளனம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி கொழும்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும் நிகழ்வில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

கடந்த 29 ஆம் திகதி கொழும்பு பத்தரமுல்லையில் கடற்தொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன தலைமையில் நடைபெற்ற கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் சந்திப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளதாகவும், இந்நிகழ்வுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளதாகவும் யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வுக்கு வடபகுதியில் யாழ்., கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களின் கடற்தொழில் மகா சம்மேளனப் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

இதற்கென யாழ். மாவட்டத்திலிருந்து கடற்தொழில் மகா சம்மேளனத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர், உபதலைவர் மற்றும் 200 வரையான அங்கத்தவர்களும் செல்லவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இவ்வாறு ஜனாதிபதியினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும் கடற்தொழில் மகா சம்மேளனம் நாட்டின் அனைத்துப் பகுதி மீனவர்களினதும் அபிவிருத்தி, பாதுகாப்பு மற்றும் கடற்தொழிலாளர்களினுடைய அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்கு உழைக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (பா)

# கோப்பாயில் சிறுகதைப் பயிலரங்கு பண்பாட்டுப் பேரவை ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)


வலி.கிழக்குப் பிரதேசப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சிறுகதைப் பயிலரங்கு எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை காலை கோப்பாயில் உள்ள பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பிரதேச செயலரும் பண்பாட்டுப் பேரவையின் தலைவருமாகிய மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ள இப்பயிலரங்கில் தொடக்கவுரையை வலி. கிழக்குப் பண்பாட்டுப் பேரவையின் உப தலைவர் ச.லலீசன் ஆற்றவுள்ளார்.

தமிழில் சிறுகதையின் அமைப்பும் உள்ளடக்கமும் என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி த.கலாமணியும் ஜெயகாந்தனின் யுகசந்தி ஒரு பார்வை என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இ.ராஜேஸ்கண்ணனும் கருத்துரை வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் பங்கேற்றுப் பயன்பெறும் பயிலுநர்கள் உருவாக்கும் சிறுகதைகளை உதவிப் பிரதேச செயலர் தாட்சாயினியும் மூத்த எழுத்தாளர் யோகேஸ்வரி சிவப்பிரகாசமும் மதிப்பிட்டுக் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

சிறுகதை எழுதுவதில் ஆர்வமுள்ளவர்களுக்கும் நல்ல சிறுகதைகளை இரசிப்பதற்கு ஆர்வமுடையோருக்கும் இப்பயிலரங்கு பயன்பாடுள்ளதாக அமையும் எனவும், எப்பிரதேசத்தைச் சேர்ந்தவராயினும் சனிக்கிழமை காலை வருகை தந்து பயன்பெறலாம் எனவும் வலி.கிழக்குப் பண்பாட்டுப் பேரவையினர் அறிவித்துள்ளனர்.

# வவுனியாவில் திருட்டு மின்சாரம் பெற்றோருக்கு அபராதம்



(வவுனியா)

மின்சார சபையினர் வவுனியா நகரிலும் சுற்றாடலிலும் நடத்திய பரிசோதனையின் போது திருட்டுத்தனமாக மின்சாரத்தை பெற்றுக் கொண்டவர்களில் 80 பேர் மீதான வழக்கு விசாரணை வவுனியா மாவட்ட நீதிமன்றில் பதில் நீதிவான் எம்.சிற்றம்பலம் முன்னிலையில் நேற்று வியாழன் நடைபெற்றபோது கள்ளத்தனமாக மின்சாரத்தைப்பெற்ற அனைவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டமைக்கு அமைய அபராதமும் மின்சார சபைக்கு ஏற்பட்ட நட்டஈட்டையும் செலுத்தினார்கள்.

இந்த வகையில் 50 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் கிடைத் திருந்தது என நீதிமன்ற பதிவாளர் தெரிவித்தார்.


ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் செல்வி
ஸ்ரீஸ்கந்தராஜா மதுஷா
மண்ணகத்தில்: 02.07.1995
விண்ணகத்தில்: 02.09.2010

பாடித்திரிந்த எமதருமை
பாசப் பறவையது
நேசம் வைத்த எம்மை
மறந்து எங்கோ
மறைந்து போனதுவோ

கனகராயன்குளம்,
புதுக்குளம்,
வவுனியா.

(R/045)

தகப்பன்: ஸ்ரீ
தாய்: செல்வராணி
தங்கை: துளசி

தன்னலம் சிறிதும் இல்லாமல் நிறைந்த அன்புடன் பழகுபவர்களே இப்போது காலத்துக்குத் தேவைப்படுகிறார்கள். பெருமையை விலக்கினால் இதுவரையிலும் செய்யாத மகத்தான செயல்கள் அனைத்தும் செய்து முடிப்பீர்கள்.

- விவேகானந்தர் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## செல்லும் வழி இருள் அகல...

அச்சம் என்பது மடமை என்பதில் சந்தேகம் இல்லை. அச்சத்தை உருவாக்குவதன் மூலம் முழுச் சமூகத்தையுமே மடமை நிலைக்குள் தள்ளிவிட முடியும். வீரத்தையும், வன்முறையையும் ஒருசிலர் கையிலெடுத்துக்கொண்டு, பரந்துபட்ட மக்களை அதை நம்பியிருக்க வேண்டியவர்களாக ஆக்குவதன் மூலம் ஒருசில வெற்றிகள் குவியலாம். ஆனால் சமூகத்தின் மனோநிலை ஏதோ ஒரு அடக்குமுறைக்குள் பணிந்து வாழப்பழகிக்கொண்டு விட்டதாகவே மாற்றப்பட்டிருக்கும்.

கமலஹாசனின் தெனாலி படத்தில் இலங்கைத் தமிழரின் அச்சவுணர்வு நகைச்சுவைக்காக மலினப்படுத்தப்பட்டிருந்தாலும் கூட, நமது சமூகத்தின் பிரதான நோய்க்கூறாக அது இருப்பது சரியாகவே கண்டுகொள்ளப்பட்டிருக்கிறது. அனைத்துத் தரப்பாலும் அச்சமூட்டப்பட்ட நிலையிலேயே மக்கள் போராட்டத்தை ஆதரிக்கவும் போரை ஏற்றுக்கொள்ளவும் பழக்கப்படுத்தப்பட்டார்கள் என்பதை ஒப்புக்கொள்வதில் இன்றைக்கு யாருக்கும் சிரமமிருக்காது.

அரச ஒடுக்குதல் ஏற்படுத்திய பய உணர்விலிருந்து தப்பிக்கொள்ள நமக்குள்ளிருந்தும் அதிக பயம் ஏற்படுத்தக் கூடிய வன்முறையையே நாம் தேர்வுசெய்து கொண்டோம். அல்லது அதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டோம். தாகத்திற்கு உப்புநீரை அள்ளிக் குடித்தவர்கள் போல அச்சத்திலிருந்து விடுதலையாகும் கனவில் மேலும் அச்சத்திற்குள் வீழ்ந்தோம்.

நமது போராட்டம் அச்சம் அகலப்போராடும் சுதந்திரமான மக்களது போராட்டமாக மாறவில்லை. மக்களை மேலும் மேலும் அச்சத்தில் வீழ்த்தியதாகவே அது முடிந்தது. இன்று மக்களுக்கான புனர்வாழ்வு என்பது அவர்களை அச்சவுணர்விலிருந்து மீளவைக்கும் பெரும்பணியை உள்ளடக்கியதே.

மக்களை அச்சத்திற்குள் வைத்திருந்து லாபம் தேடமுற்படும் சக்திகளிடமிருந்து நம்மைத் தற்காத்துக்கொள்ளும், சமூகத்தின் பயம் நீங்கும் வழிகளையே நாம் நாட வேண்டும். மேலும் மேலும் பயமூட்ட 'பொல்லுக் கொடுக்கும்' துள்ளல்களும் பெருப்பித்தல்களும் நம் சமூகத்தின் நலுகைக்கு உதவாது. 'வெத்து' வசனங்களும் பயத்தை விரட்டாது.

சாத்தியப்படக் கூடிய குறைந்தபட்ச அதிகாரங்களோடேனும் விரைவாக அரசியல் நிர்வாக அலகுக்கு வழிகாணுதலே இன்று முக்கியமாகத் தெரிகிறது. சட்ட ரீதியான, ஜனநாயக முறைமைகளுடனான வழிகளினாலேயே சமூகத்தின் அடியாழத்தில் உறையும் பயங்கள் மெல்ல அகலுதல் சாத்தியமாகும். மாறாக, பகை வளர்ப்பானது பயத்தையும் இன்னும் வளர்ப்பதேயாகும். சட்டரீதியான அலகுகளின் ஆளுகைக்குள் சமூகம் கொண்டுவரப்படுவதன் அவசியம் தாமதமின்றி உணரப்பட வேண்டும் என்பதே நம் எதிர்பார்ப்பு.

அவலங்கள் நீங்கிய நமது மக்களின் நல்வாழ்வு குறித்து உண்மையாக அக்கறைப்படுபவர்கள், பயமூட்டும் செய்திகளை அரசியலுக்காக 'மகிழ்ந்து' பெருப்பிக்காது, மனிதர்கள் மற்றும் உயிர்வாழ்க்கை மீதான தங்களது அன்பை வெளிக்காட்ட வேண்டும். வீம்புகள் ரோசங்களை முதன்மைப்படுத்தாது அச்சமகற்றும் வாழ்வுக்காகப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றுக்கு அனைவருமாகக் கை கோர்த்துக்கொள்ள வேண்டிய தருணம் இது.

பழிவாங்குதலோ பகை தீர்த்துக்கொள்ளுதலோ அல்ல, மக்களை மேலும் அச்ச இருளுக்குள் தள்ளிச் சென்றுகொண்டிருக்காது இந்தச் சூழலை வெல்ல உடனடி இடைக்கால ஏற்பாடொன்றின் அவசியத்தை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். நமக்குள்ளிருக்கும் தீவு மனோபாவங்கள், காழ்ப்புகள், கைப்புகள் எல்லோர்க்குமான நல்வாழ்வை உத்தேசித்து மாறவேண்டும். இதை நம்மிடமிருந்து தொடங்க என்ன வழி என்று கண்டறிந்து முன் காலடியை வைத்தாகவேண்டும். பாதை நாமேதான் முனைந்து உருவாக்கியாக வேண்டும்.

உண்மையான மனிதநேயம் - மக்களன்பு என்பது மேலும மேலும் பயத்தையோ விரோதத்தையோ தூண்டிக்கொண்டிருக்கும் விதமாக இராது; முடிந்தவரை விரைவாகவும் நேர்மையான சமூகப்பற்றுடனும் மக்களை இருளிலிருந்து மீட்டு இன்ப வாழ்வுக்கு இட்டுச் செல்வதாக இருக்கும்.

- ஆசிரியர்

# வன்னியிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவான 468 மாணவர்கள் நேற்று கௌரவிக்கப்பட்டனர்

(வவுனியா)

இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு புதிதாக அனுமதிபெற்ற வன்னிப்பிரதேசமான வவுனியா, மன்னார்,முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 468 மாணவர்களை வரவேற்கும் வைபவம் நேற்று வியாழக்கிழமை வவுனியாவில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

வவுனியா மாவட்ட செயலகமும், அனைத்து பல்கலைக்கழக நிர்வாகமும் இணைந்து இந்த வரவேற்பு வைபவத்தினை ஏற்பாடு செய்திருந்தனர்

வவுனியா மாவட்ட செயலக வாசலிலிருந்து மாணவர்களும் அவர்களுடைய பெற்றோர், பாதுகாவலர்கள் மற்றும் அதிகாரிகள் பாடசாலை மாணவர்களுடைய பாண்ட் வாத்தியம் சகிதம் பிரதான வீதி வழியாக நகர சபை கலாச்சார மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

பல்கலைக்கழக அனுமதி தேசத்தின் அபிமானம் என்னும் தலைப்பில் நடைபெற்ற இந்த வரவேற்பு வைபவத்தில் மாவட்ட அரச அதிபர் திருமதி பி எம் எஸ் சாள்ஸ், வவுனியா வளாக வியாபாரகற்கைகள் நெறி பீடாதிபதி கலாநிதி எஸ் மங்களேஸ்வரன், வரவேற்பு நிகழ்வின் ஏற்பாட்டுக்குழுத் தலைவர் பேராசிரியர் ஏடபிள்யூ - சிறிசேனா, வவுனியா மேலதிக அரச அதிபர் என் திருஞானசம்பந்தர், மன்னார் மேலதிக அரச அதிபர் திருமதி சரஸ்வதி மேகநாதன் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பலர் இந்த வைபவத்தில் கலந்துகொண்டனர். (39)

## ஆவணி சதுர்த்தி விரதம் ஆலயங்களில் விசேட வழிபாடுகள்

(வவுனியா)

உலகம் வாழ் இந்துக்களுடைய முக்கிய விரதமான ஆவணிச் சதுர்த்தி விரதம் பக்தி பூர்வமாக நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

நாட்டிலுள்ள அனைத்து இந்து ஆலயங்களிலும் விசேட பூசை வழிபாடுகள். அபிஷேகங்கள் என்பன இடம்பெற்றன.

வவுனியாவில் உள்ள அதிகமான விநாயகர் ஆலயங்களில் நேற்று வியாழக்கிழமை காலை அபிஷேகம் தீபாஞ்சலிகள் நடைபெற்றது.

வவுனியா மில் வீதி புளியடி பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற விநாயகர் சதுர்த்தி அபிஷேக ஆராதனையில் பெருமளவிலான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

தமிழகத்தில் மண்ணில் தயாரிக்கப்பட்ட பெரிய அளவிலான விநாயகர் சிலைகள் பூசையைத் தொடர்ந்து ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டு கடலில் கரைப்பது வழக்கமான நடைமுறையாக பின்பற்றப்பட்டு வருகிறது. (39)

## க.பொ.த(சா/த)மாணவர்களுக்கான சிறப்பு கற்றல் செயற்திட்டம்

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் வலயக் கல்விப் பணிமனையினரால் க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான சிறப்பு கற்றல் செயற்திட்டம் ஒன்று செயற்படுத்தவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மாணவர்களை பரீட்சைக்கு தயார்ப்படுத்தும் வகையில் 890 மாணவர்களுக்கு 20 பாடசாலைகளில் செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் 3 ஆம் தவணை ஆரம்பத்தில் இச் செயற்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் இவ் வலயத்திலுள்ள பாடசாலைகளில் கல்விபயிலும் க.பொ.த(சா/த)மாணவர்களின் பெறுபேறுகளை அதிகரிக்கும் நோக்குடன் இச் செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (121)

## விசாரணைகள் நடைபெறமாட்டாது

(பருத்தித்துறை)

கரவெட்டி பிரதேச செயலகப்பிரிவு மத்தியஸ்தர் சபையின் விசாரணைகள் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் இம்மாதம் 3,4,5 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. அதனால் எற்கனவே 4 ஆம் திகதி நடைபெற விருந்த விசாரணைகள் இம் மாதம் 11 ஆம் திகதி நடைபெறும் என கரவெட்டிப் பிரதேச மத்தியஸ்தர் சபையின் தவிசாளர் சி.நற்குணலிங்கம் அறிவித்துள்ளார்.(109)

# நிறைவு பெறும் நிலையிலுள்ள பருத்தித்துறை பொதுச்சந்தை கட்டடப்பணிகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபையின் பொதுச்சந்தைக் கட்டடத் தொகுதியின் மேல்மாடி வேலைகள் பூர்த்தி அடைந்துள்ளதுடன், அடுத்த மாடிக்கான வேலைகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் 4 கோடியே 31 இலட்சம் ரூபா இதற்கு செலவு செய்யப்பட்டுள்ளது. இச்சந்தைக் கட்டடத்தின் கீழ் தள கடைகளின் வேலைகள் முற்றாகப்பூர்த்தி அடைந்துள்ளன. சந்தையின் முழுக்கட்டுமானப் பணிகளும் இவ்வருட முடிவுக்குள் பூரணமாக முடித்துவிடும் என ஒப்பந்தக்காரர் தெரிவிக்கின்றனர்.

இச் சந்தைக் கட்டடத்தின் திறப்புவிழா எதிர்வரும் தைமாத முற்பகுதியில் நடைபெறவிருப்பதாகவும், ஏற்கனவே யுத்தத்தால் பாதிக்கப்பட்டபோது பழைய சந்தைக் கட்டடத்தில் கடை வைத்திருந்தவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கடைகள் வழங்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை புதிய பேருந்து நிலையம் நகரசபை விளையாட்டு மைதானப்பகுதிக்கு மாற்றப்படவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (109)

## இலவச கருத்தரங்கு

(சாவகச்சேரி)

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த(சா/த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு ஒன்று இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கு இன்று முதல் எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை ஒவ்வொரு வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் 5மணிவரை மீசாலை உயர் கலைக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பங்குபெறவிரும்பும் மாணவர்கள் குறித்த கல்லூரி நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

## காலபோக செய்கையில் மும்முரமாக ஈடுபடும் முல்லைத்தீவு விவசாயிகள்

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டான்,முத்தையன்கட்டு பகுதிகளில் காலபோக பயிர்ச்செய்கையை மேற்கொள்ளவுள்ள விவசாயிகள் மழைக்காக காத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசங்களில் சிறுபோக அறுவடைகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் காலபோக பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் பொருட்டு விவசாயிகள் தமது வயல் நிலங்களிற்கு வேலி அமைத்து வரம்புகளைக் கட்டி பண்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை அதிக வயல் நிலங்களை பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தி அதன் மூலம் பெறப்படும் வருமானத்தின் மூலம் அறுவடை இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்யும் நோக்குடன் விவசாயிகள் காலபோக பயிர்ச்செய்கையில் முயற்சியுடன் மும்முரமாக ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.(101)

## ஒட்டுசுட்டான் புளியங்குளம் வீதி துரிதகதியில் புனரமைப்பு செய்யப்படுகிறது

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டானிலிருந்து நெடுங்கேணி ஊடாக புளியங்குளம் செல்லும் பிரதான வீதி தற்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது.

நீண்டகாலமாக திருத்தம் செய்யப்படாது குண்டும் குழியுமாகக் காணப்பட்ட இவ்வீதியில் தற்போது 30 இற்கு மேற்பட்ட பாலங்கள் அமைக்கப்பட்டு பாதுகாப்பான முறையில் துரிதமாக இவ் வீதி புனரமைக்கப்பட்டு வருகிறது.

இப் புனரமைப்புப் பணிகளில மேற்படி பிரதேச இளைஞர்களே கூலிக்காக அமர்த்தப்பட்டுள்ளதால் தொழில் இல்லாது இருக்கும் இளைஞர்களுக்கு இது பெரும் வாய்ப்பாக அமைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர். (101)

# மாதகலில் அறுபது இலட்ச ரூபா செலவில் கூறுவிலை விற்பனை நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாதகல் பிரதேச கடற்றொழிலாளர்களின் நன்மை கருதி அறுபது இலட்சம் ரூபா செலவில் ஐ.ஓ.எம் மற்றும் அவுஸ்ரேலிய அபிவிருத்தி முகவர் நிலையத்தினரால் அமைக்கப்பட்ட கூறுவிலை விற்பனை நிலையத்தையும் பலநோக்கு மண்டபத்தையும் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் திறந்து வைத்தார்.



இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடங்களை திறந்து வைத்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் இப்பகுதி கடற்றொழிலாளர்களின் நீண்டகால தேவையொன்று பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று இறங் குதுறை ஒன்றை அமைப்பது தொடர்பான கடற்றொழிலாளர்களின் கோரிக்கையினை கடற்றொழில் அமைச்சர் மற்றும் அதன் உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று விரைவில் இறங்குதுறை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் அதேவேளை நவீன முறையில் கடற்றொழிலை மேற்கொள்பவர்களுக்கு தொழிலை ஆரம்பிப்பதற்கும் அதற்குரிய உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்கும் இலகு வங்கிக் கடன்களை பெற்றுத் தருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் மீள்குடியேற்றப்பட்ட பிரதேசம் என்ற வகையில் மக்களின் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் நாம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். குறிப்பாக பிரதேசத்திற்கான குடிநீர் விநியோகத்திட்டம் பெருமளவு நிதி செலவீட்டில் அரச மேற்கொள்ளவுள்ளது. இவ்வாறான உதவித் திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்தி மக்கள் உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இந் நிகழ்வில் வலி தென்மேற்கு பிரதேச சபை தலைவர் ஜெபநேசன், நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் இப் பிரதேசத்தினதும் மக்களினதும் வாழ்வாதார மேம்பாட்டிற்கு கடந்த காலத்தில் மேற்கொண்ட உதவிகள் போன்று எதிர்காலத்திலும் மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

அருட்தந்தை ஆனந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இத் திறப்பு விழா நிகழ்வில் ஐ.ஓ.எம் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி றிச்சட், அந் நிறுவனத்தின் திட்ட அதிகாரி பற்றிக், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் எழிலரசி, பிரதேச சபை செயலாளர் திருமதி சிவலிங்கம், கடற்றொழில் நீரியல்வள உதவித்திட்டப் பணிப்பாளர் இரவீந்திரன், ஈ.பி.டி.பியின் வலிகாமம் பிரதேச இணைப்பாளரும் வலிமேற்கு பிரதேச சபை உறுப்பினருமான ஜீவன், வலி தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஜீவா, கடற்படை அதிகாரி கப்டன் கமகே உட்பட கிராம அலுவலர் மற்றும் கடற்றொழில் சங்க பிரதிநிதிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்.

## சமுர்த்தி நிவாரணத்தை பெற்றுக் கொள்ளவும்

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் பல நோ. கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் யூலை ஓகஸ்ட் மாதங்களுக்கான சமுர்த்தி நிவாரணம் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. சமுர்த்தி நிவாரணம் பெறுவோர் கிளைகளில் சென்று பெற்றுக் கொள் ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (104)

## வலிகிழக்கு பிரதேச சபையின் முதலாவது கூட்டம்

(யாழ்.நிருபர்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முதலாவது கூட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் 5ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10மணிக்கு புத்தூரில் உள்ள பிரதேச சபையின் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

வலி.கிழக்கு பிரதேச சபையின் தலைவர் அன்னலிங்கம் உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இம் முதலா வது கூட்டம் தொடர்பாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட 21 உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் பிரதேச சபை உறுப்பினர்கள் சகலரும் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (10)

## கை கழுவும் தினத்தை அனுஷ்டிக்குமாறு மாகாண கல்விப்பணிப்பாளர் அறிவுறுத்து

(பருத்தித்துறை)

கை கழுவும் தினம் எதிர்வரும் 14ஆம் திகதி இலங்கை பூராவுமுள்ள பாடசாலைகளில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

வட மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளும் இக் கை கழுவும் தினத்தை விசேட நிகழ்ச்சியாகக் கொண்டு எதிர்வரும் 14ஆம் திகதியை அனுஷ்டிக்குமாறு வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார்.

அத்துடன் இம்முறை ஒவ்வொரு கல்விக் கோட்டத்திலும் ஒரு பாடசாலையை தெரிவு செய்து கை கைகழுவும் தினத்தை வைபவ ரீதியாகக்கொண்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கமைய பருத்தித்துறை கல்விக் கோட்டத்திற்கு தும்பளை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயமும், கரவெட்டிக் கோட்டத்திற்கு கரணவாய் மகாவித்தியாலயமும், மருதங்கேணி கோட்டத்திற்கு அம்பன் அமி.த.க பாடசாலையும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார். இந் நிகழ்வுகளுக்கு கோட்டக்கல்விப் பணிப்பாளர்களே பொறுப்பான அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதுதொடர்பான அறிக்கைகளை தயாரப்படுத்தி மாகாண கல்வி மத்திய கல்வி அமைச்சுக்கும் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள் ளப்பட்டுள்ளது. (109)

## சாதாரணதர மாணவர்களுக்கு சிறப்பு கற்றல் செயற்திட்டம்

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் வலயக் கல்விப்பணிமனையினரால் க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான சிறப்புக் கற்றல் செயற்திட்டம் ஒன்று செயற்படுத்தவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர்தெரிவித்துள்ளார். மாணவர்களை பரீட்சைக்கு தயார்படுத்தும் வகையில் 890 மாணவர்களுக்கு 20 பாடசாலைகளில் செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் 3ஆம் தவணை ஆரம்பத்தில் இச் செயற்திட்டம் மெற்கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் இவ்வலயத்திலுள்ள பாடசாலைகளில் கல்விப்பிலும் க.பொ.த. (சா/த) மாணவர்களின் பெறுபேறுகளை அதிகரிக்கும் நோக்குடன் இந்தச் செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (121)

## ஆலயங்களில் செப்புப் பொருட்களை திருடிவந்த ஆறுபேர் பிடிபட்டனர்

### - சுன்னாகம் பொலிஸார் தெரிவிப்பு



(சுன்னாகம்)

சுன்னாகம் பிரதேசத்தினை அண்டிய இணுவில் போன்ற பகுதிகளில் கோயில்களை உடைத்து செப்புப் பாத்திரங்களை களவாடிவந்த அறுவரை சுன்னாகம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பல இலட்சம் பெறுமதியான இந்த செப்புப்பாத்திரங்களை விற்பனை செய்துவந்த இடத்திலிருந்து சுன்னாகம் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் சிந்தக பண்டார தெரிவித்த தாவது

"இராணுவத்தினர் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வருகிறார்கள் என்ற முறைப்பாடு பரவலாக எங்களுக்குக் கிடைத்தது. ஆனால், அண்மையில் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் கோயில் கொள்ளையில் ஈடுபட்ட ஆறு பேரை நாங்கள் கைதுசெய்தோம். சுழிபுரத்தினைச் சேர்ந்த 4 பேரும் கிளிநொச்சியைச் சேர்ந்த 2 பேருமே இவர்களாவர். இவர்கள் அனைவரும் சிறிய வயதினை உடையவர்கள். 17 தொடக்கம் 24 வயதுக் குட்பட்டவர்களே கைதுசெய்யப் பட்டவர்களாவர்.

கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர் படுத்திய போது எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. நாங்கள் கைதுசெய்த இந்தக் கொள்ளை கும்பல் 20இற்கும் மேற்பட்ட கோயில்களில் கொள்ளையடித்துள்ளது. இதில் 6 கோயில்களின் பொருட்களை மீட்டுள்ளோம். மக்களின் ஐயமும் இப்பொழுது நீங்கியுள்ளது..." என்று குறிப்பிட்டார்.

## மீள்குடியேற்றுமாறு மக்கள் கோரிக்கை

(யாழ். நிருபர்)

காரைநகர் பலுகாடு பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர முழுமையாக அனுமதிக்கப்படவில்லை எனக் கவலை தெரிவிக்கின்றனர். கடற்படை முகாமை அண்மித்த பிரதேசம் பாதுகாப்பு வலயமாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளுக்கான நட்ட ஈட்டுப் பணம் வழங்கப்பட்டு வருகின்றது.

நட்டஈட்டுப் பணம் கிடைக்காதவர்கள் தமது சொந்தக் காணிகளில் தாம் மீளக் குடியமர்வதற்கு அனுமதி வழங்கி ஏற்ற ஒழுங்குகள் செய்து தரப்படவேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(10)

## நீண்ட காலமாக திருத்தப்படாத காரைநகர் தோப்புக்காடு வீதி

(யாழ். நிருபர்)

காரைநகர் தோப்புக்காடு கரையோர வீதி திருத்தப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. 1991 இடம்பெயர்வின் பின்னர் இங்கு மக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் இவ் வீதி புனரமைக்கப் படாமையால் இவ் வீதியைப் பயன்படுத்தும் பாதசாரிகளும், வாகன ஓட்டிகளும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அண்மைக் காலமாக அதிகளவு குடும்பங்கள் தோப்புக்காடு கிராமத்தில் மீளக்குடியமரத் தொடங்கியுள்ளன. இருபது வருடங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த தோப்புக்காடு மறைஞான சம்பந்த வித்தியாசாலை கடந்த ஆண்டு முதல் மீளத்திறக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகிறது.

ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்பாடசாலையில் அனுமதி பெற்று கல்வி கற்று வருகின்றனர்.

இந்த நிலையில் மேற்படி வீதியை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் புனரமைத்துத் தருமாறு இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (10)

# தென்னிலங்கையின் 2 வலைத் தொழிற்சாலைகள் வடகடல் நிறுவனத்துடன் இணைக்கப்படும்

## நியமனக் கடிதம் வழங்கும் வைபவத்தில் நிறுவனத் தலைவர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அம்பாந்தோட்டை மற்றும் வென்னப்புவப் பகுதிகளில் அமைந்துள்ள வலைத் தொழிற்சாலைகள் இரண்டு விரைவில் வடகடல் நிறுவனத்தின் கீழ் கொண்டுவரப்படவுள்ளதாக வடகடல் நிறுவனத்தின் தலைவர் ஆ.பரந்தாமன் தெரிவித்துள்ளார்.

இதற்கான நாடாளுமன்ற அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், இவ்விரண்டு வலைத்தொழிற்சாலைகளிலும் பணியாற்றிய சுமார் 250 வரையான பணியாளர்கள் வடகடல் நிறுவனத்தின் கீழ் வரவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தற்சமயம் வடகடல் நிறுவனத்தில் பணியாற்றும் 68 ஊழியர்களுடன் இவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனா என்று நேற்று குருநகரில் அமைந்துள்ள வடகடல் நிறுவனத்தில் நடைபெற்ற பணியாளர்களுக்கான பதவி உயர்வு மற்றும் நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடகடல் நிறுவனத்தில் சுமார் பத்து வருடங்களாக கணக்காளராகவும், உதவிப் பொதுமுகாமையாளராகவும் கடமையாற்றிய பிரான்சிஸ் கேதீஸ்வரனுக்குப் பதவி உயர்வு வழங்கி நிறுவனத்தின் பொதுமுகாமையாளர் பதவிக்கான நியமனக் கடிதத்தை வடகடல் நிறுவனத் தலைவர் ஆ.பரந்தாமன் அவருக்கு வழங்கினார்.

மற்றும் மகேந்திரன் கிருபாகரன் கணக்களராகவும், பாலச்சந்திரன் சத்திய தாசன் எழுதுவினைஞராகவும், அன்ரன் நிரோஷன், அன்ரன் டிலின்ஸ் ஆகியோர் உற்பத்தித் தொழிலாளர்களாக நியமிக்கப்பட்டு அவர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்களையும் அவர் வழங்கி வைத்தார். (பா)

## துணுக்காயில் 7 பாடசாலைகளில் குடிநீர், சுகாதாரத் திட்டங்கள்

(கிளிநொச்சி)

துணுக்காய் கல்வி வலயத்தில் யுனிசெவ் நிறுவத்தின் அனுசரணையுடன் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்தும் செயற்றிட்டம் 7 பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

5மில்லியன் ரூபா செலவில் இச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதன் பிரகாரம் இப்பாடசாலைகளில் குடிநீர் வசதிகள் சுகாதார வசதிகள் என்பன ஏற்படுத்தப்பட்டு வருவதால் இப் பாடசாலை மாணவர்கள் சிரமமின்றி தேவைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (121)

## காரைநகர் வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு

(யாழ்.நிருபர்)

காரைநகர் அரசினர் வைத்தியசாலையில் புற்றுநோயாளர்களுக்கான கிளினிக் சிகிசைப் பிரிவு இயங்கி வருகிறது.

யாழ்.போதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு வைத்திய நிபுணர் ந.ஜெயக்குமாரன் ஒவ்வொரு மாதமும் நான்காவது புதன்கிழமைகளில் நண்பகல் ஒரு மணிக்கு மேற்படி வைத்தியசாலையில் புற்றுநோயாளர்களைப் பார்வையிட்டு வருகிறார்.

யாழ்.மாவட்டத்தில் புற்று நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் அயற் கிராமங்களான மூளாய், சுழிபுரம், வட்டுக்கோட்டை போன்ற கிராமங்களிலிருந்தும் நோயாளிகள் சிகிச்சைக்காக இவ்வைத்தியசாலைக்கு வருகை தருகின்றமை குறிப்பிடத்தக்கது. (10)

# "உங்களுக்குத் தெரியுமா" போட்டியில் கோட்டமட்டத்திற்கு 7 மாணவர்கள் தெரிவு

(பருத்தித்துறை)

வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளில் பத்தாம் தர மாணவர்களுக்கான பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட "உங்களுக்குத் தெரியுமா" போட்டியில் தெரிவு செய்யப்பட்ட ஏழு மாணவர்களுக்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது.

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட வினாத்தாள்களையே மாணவர்களுக்கு கோட்ட மட்டத்தில் வழங்கி இப்போட்டியை குறித்த துறை தொடர்பான அறிவுடைய ஐந்து மேற்பார்வையாளர்கள் கொண்ட குழுவே நடத்தவுள்ளது.

இப்போட்டி முடிவடைந்ததும் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட புள்ளித்திட்டத்திற்கமைவாக இம் மேற்பார்வையாளர்களே மாணவர்களின் புள்ளிகளை அட்டவணைப்படுத்த வேண்டும்.

கோட்ட ரீதியான அட்டவணைகளை ஒன்றாக்கி வலய மட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் ஏழு மாணவர்களை வலய மட்டப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்ய வேண்டும்.

அவர்களின் விபரங்களை எதிர்வரும ஒக்ரோபர் முதலாம் திகதிக்கு வ.ஸ்ரீஸ்கந்தராஜா, பிரதிக் கல்விப்பணிப்பாளர், மாகாணக் கல்வித்திணைக்களம், மருதனார்மடம், சுன்னாகம் என்னும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவு செய்யப்படும் குழுவினர் ஏனைய வலயக் குழுவினருடன் வினாடிவினாப் போட்டியில் ஈடுபடுத்தப்பட்டு மாகாண மட்டக் குழுவுக்குத் தெரிவு செய்யப்படும். வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இவ்வட்டத்தின் இறுதிப்போட்டி ஒளிபதிவு செய்யப்பட்டு தொலைக்காட்சியில ஒளிபரப்பப்படவுள்ளதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார். (109)

## பாடசாலை மைதானம் இராணுவத்தால் புனரமைப்பு

(அம்பலப்பெருமாள்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானம் இராணுவத்தினரால் தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது.

64 ஆவது படைப்பிரின் பிரிகேடியர் பனங்வல தலைமையில் இராணுவத்தினர் இப்புரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இம் மைதானம் புனரமைக்கப்பட்ட பின்னர் பாடசாலை மாணவர்கள் விளையாட்டுச் செயற்பாடுகளை இலகுவாக மேற கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (121)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(02.09.2011 - வெள்ளிக்கழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
கர வருஷம்
ஆவணி 16 ஆம் நாள்.
இராகுகாலம் 10.35-12.05, சுபநேரம் 6.05 -7.35,
நட்சத்திரம்: சித்திரை காலை 7.01 வரை
சுவாதி பி.இ. 5.26 வரை
திதி: பஞ்சமி மு.இ. 9.43 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:- பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, உறவினர் வருகை, தேக ஆரோக்கியம், நண்பர் தொல்லை

ரிஷபம:- வீண் அலைச்சல், பணக் கஷ்டம், நண்பர் தொல்லை, உடம்பு நலக்குறைவு, மருத்துச் செலவு

மிதுனம் :- பணவரவு, குடும்பத்தில் குதூகலம், நண்பர் வருகை, தேக ஆரோக்கியம், விருந்துபசாரம்.

கடகம்:- வீண் அலைச்சல், பணக் கஷ்டம், நண்பர் தொல்லை, தேக நலம் பாதிப்பு, தெரு விபத்து.

சிம்மம்:-பணவரவு, குடும்பத்தில் குதூகலம், நண்பர் வருகை, விருந்துபசாரம், வாக்குவாதம்.

கன்னி :- வீண் அலைச்சல், பணக் கஷ்டம், தேகசுகம் பாதிப்பு, அதிகாரப் போட்டி, மருந்துவச் செலவு.

துலாம் :- பணவரவு, குடும்பத்தில் குதூகலம், விருந்துபசாரம், தேக ஆரோக்கியம், வீதி விபத்து வரலாம்.

விருச்சிகம்:- அதிகாரப்போட்டி, பணக் கஷ்டம், தேகசுகம் பாதிப்பு, மருந்துவச் செலவு, நண்பர் வருகை.

தனுசு:- பணவரவு, குடும்பத்தில் குதூகலம், தேக ஆரோக்கியம், விருந்துபசாரம், வீதி விபத்து வரலாம்.

மகரம:- நண்பர் வருகை, பணக் கஷ்டம், தேகசுகம் பாதிப்பு, மருந்துவச் செலவு, அதிகாரப் போட்டி.

கும்பம் :- பணவரவு, குடும்பத்தில் குதூகலம், தேக ஆரோக்கியம், விருந்துபசாரம், நண்பர் வருகை.

மீனம்:- பணக்கஷ்டம், தேகசுகம் பாதிப்பு, மருந்துவச் செலவு, வீதி விபத்து, அதிகாரப் போட்டி.

## நிலப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பு

(யாழ்.நிருபர்)

வேலணைப் பகுதியில் நிலப்பூச்சித் தொல்லைகள் அதிகரித்து வருவதாகவும், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அதற்குரிய மருந்து தெளிக்க நடவடிக்கை எடுக்குமாறு இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வேலணைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளால் இக்கருத்து முன்வைக்கப்பட்டது.

வேலணைப் பிரதேச சுகாதார சேவைகள் குறித்து ஆராயப்பட்டதோடு, சுகாதார சேவைகள் தொடர்பாக மக்களின் வேண்டுகோள் தேவைகள் பற்றி விபரமான அறிக்கையையும், வேலணை வைத்தியசாலையின் ஆளணிப் பற்றாக்குறை தொடர்பான விபரங்களையும் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரின் கவனத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். (10)

## யாழ்.விவசாயப் பயிற்சி நிலையத்தில் மாபெரும் விவசாயக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)


"இயற்கையுடன் இணைந்த நிலைபேறான விவசாயத்தை நோக்கி" என்னும் தொனிப் பொருளில் வடமாகாண விவசாயத் திணைக்களம் மாபெரும் விவசாயக் கண்காட்சியொன்றை நடத்தவுள்ளது.

இக்கண்காட்சி எதிர்வரும் 5ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை யாழ்.மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் மற்றும் அதனுடன் இணைந்த வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியை எதிர்வரும் 5ஆம் திகதி முற்பகல் 8.30 மணிக்கு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

சாவற்கட்டு மகாத்மா முன்பள்ளி விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் க.இலட்சுமணசர்மா உரையாற்றுவதைக் காணலாம். (104)



விளையாட்டுச் செய்திகள்

# இந்தியாவுடனான ருவென்ரி-20 போட்டி 6 விக்கெட்டுகளால் வென்றது இங்கிலாந்து



இந்திய அணிக்கெதிரான சர்வதேச இருபதுக்கு-20 கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி ஆறு விக்கெட்டுக் களால் வெற்றியீட்டியது.

மென்செஸ்டரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 19.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய அணி சார்பாக இளைய அறிமுக வீரரான அஜிங்கா ராஹானி 61 ஓட்டங்களையும், சுரேஸ் ரெய்னா 33 ஓட்டங்களையும், ராவிட் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

இங்கிலாந்து அணிசார்பாக ஜேட் டேர்பக் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தியதுடன், ஸ்டுவர்ட் புரோட் இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

166 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கிப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 19 தசம் 3 ஓவர்களில் 169 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இங்கிலாந்து அணிசார்பாக இயோன் மோர்கன் 49 ஓட்டங்களையும், கெவின் பீற்றர்சன் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்திய அணிசார்பாக பந்துவீச்சில் முனாப் பட்டேல் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தியதுடன், பிரவீன் குமார் மற்றும் விராட் கோலி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர். போட்டியின் சிறப்பாட்டக்காரராக இங்கிலாந்து பந்துவீச்சாளர் ஜேட் டேர்பக் தெரிவு செய்யப்பட்டார்.

# இங்கிலாந்திற்கு எதிரான ஒருநாள் தொடரில் ஜடேஜா

(லண்டன்)

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் இருந்து காயம் காரணமாக தொடக்க வீரர் கவுதம் கம்பீர் நீக்கப்பட்டார். இவருக்குப் பதிலாக சகலதுறை வீரர் ரவீந்திர ஜடேஜா சேர்க்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் போட்டிக் கிரிக்கெட் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி நாளை செஸ்டர்-லி-ஸ்டிரீட் நகரில் நடக்கிறது. இத்தொடருக்கான இந்திய அணியில் தொடக்க வீரர் கவுதம் கம்பீர் சேர்க்கப் பட்டிருந்தார்.



ஆனால் சமீபத்தில் ஓவலில் நடந்த நான்காவது டெஸ்டில், இங்கிலாந்தின் பீற்றர்சன் அடித்த பந்தைப் பிடிக்க முயன்ற போது கம்பீரின், பின் தலைப்பகுதியில் பலமாக அடிபட்டது. இதனால் இவரது கண் பார்வை மங்கியது. இக்குறைபாடுகள் நீங்க சிறிது காலம் தேவைப் படும் என்பதால், ஒருநாள் தொடரில் இருந்து நீக்கப்பட்டார். இவருக்குப் பதிலாக, சகலதுறை வீரர் ரவீந்திர ஜடேஜா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சுமார் எட்டு மாதங்களுக்கு பின் ஜடேஜா ஒருநாள் தொடருக்கான இந்திய அணியில் இடம் பிடித்திருக்கிறார். கம்பீர் இல்லாததால், துணைக் கப்டன் பொறுப்பு சுரேஷ் ரெய்னாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரின் 2 ஆவது சுற்றில் டிஜோகோவிச், வோஸ்னி

(நியூயோர்க்)

நியூயோர்க் நகரில் நடைபெற்று வரும் அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு டிஜோகோவிச், வோஸ்னியாக்கி ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.

முதல் நாள் போட்டியில் உலகின் முன்னணி வீரரான ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். நேற்றுமுன் தினம் இரவு நடந்த 2ஆவது நாள் போட்டியில் உலகின் முதல் நிலை வீரர் டிஜோகோவிக் (செர்பியா), அயர்லாந்து வீரர் நிலாண்டுடன் மோதினார்.

இதில் 6-0, 5-1 என்ற கணக்கில் டிஜோகோவிக் முன்னணியில் இருந்தார். அப்போது நிலாண்டு காயத்தால் ஓய்வு பெறுவதாக அறிவித்தார். இதன் மூலம் டிஜோகோவிக் 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு போட்டியில் ஸ்பெயின் வீரர் டேவிட் பெரர், ரஷ்ய வீரர் ஆந்த்ரே உடன் மோதினார்.

இதில் 2-6, 6-3, 6-0, 6-4 என்ற கணக்கில் வென்று டேவிட் பெரர் 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். இன்னொரு போட்டியில் பிரான்ஸ் வீரர் குஷாங்கா, தைபேயி வீரர் லூவை 6-4, 6-4, 6-4 என்ற கணக்கில் வீழ்த்தினார். அடுத்த போட்டியில் குரோசியா வீரர் லூஜிபிக், ஸ்லோவாக்கியா காவ்சிக் மோதினார்கள். இதில் லுஜிபிக் 7-6, 3-6, 6-1, 7-5 என்ற செட்டில் வீழ்த்தி முன்னேறினார்.

ஆர்ஜென்ரீன வீரர் டேவிட் நல் பாண்டியன், அமெரிக்க வீரர் ரெய்னால்ட்ஸ்சை 4-6, 6-3, 6-4, 6-3 என்ற செட்டில் வீழ்த்தி அடுத்த செட்டில் நுழைந்தார். உலகின் 2ஆவது வீரரான ரபேல் நடால் (ஸ்பெயின்), கசகஸ்தான் வீரர் குலுபொவை 6-3, 7-6, 7-5 என்ற நேர்செட்டில் வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.






பெண்கள் ஒற்றையர் பிரிவில் உலகின் முதல்நிலை வீராங்கனை வோஸ்னியாக்கி (டென்மார்க்), ஸ்பெயின் வீராங்கனை லகோஸ்டி ராவை 6-3, 6-1 என்ற நேர் செட்டில் வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். இன்னொரு போட்டியில் ரஷ்ய வீராங்கனை குசன்ட்சோவா, இத்தாலி வீராங்கனை எராணியை 7-5, 6-1 என்ற நேர் செட்டில் வீழ்த்தினார்.

உலகின் 4ஆம் நிலை வீராங்கனை அசரங்கா (இங்கிலாந்து), ஸ்வீடன் வீராங்கனை லார்சனை 6-1, 6-3 என்ற செடடில் வீழ்த்தி முன்னேறினார். செர்பிய வீராங்கனை ஜான் கோவிக், அமெரிக்க வீராங்கனை ரிஸ்கேவை 6-2, 6-0 என்ற நேர் செட்டில் வீழ்த்தி அடுத்த செட்டுக்குள் நுழைந்தார். உலகின்

6ஆவது நிலை வீராங்கனை சீனாவைச் சேர்ந்த லீ, ருமேனியா வீராங்கனை ஹலப்புடன் மோதினார். இதில் அவர் 2-6, 5-7 என்ற நேர் செட்டில் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். இரட்டையர் ஆண்கள் போட்டியில் இந்திய வீரர்கள் மகேஷ் பூபதி, பயஸ் ஜோடி டல்கோப்லோவ் (உக்ரைன்), ரமோஸ் (ஸ்பெயின்) ஜோடியை 7-6, 6-4 என்ற செட்டில் வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறியது. மற்றொரு போட்டியில் இந்திய வீரர் போபன்னா, பாகிஸ்தான் வீரர் குரோசியுடன் சேர்ந்து ஆடினார். எதிர்த்து ஆடிய அமெரிக்க வரர்கள் ஜினர்பி, வில்லியம்ஸ் ஜோடியை 6-1, 2-6, 6-2 என்ற செட்டில் வீழ்த்தி அடுத்த சுற்றில் நுழைந்தார்.

# டெஸ்ட் தொடரை இழந்தமைக்கு ஐ.பி.எல்.காரணமென்பது தவறு

(மான்செஸ்டர்)



ஐ.பி.எல்.போட்டிகளில் பங்கேற்றதாலேயே இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரை இந்திய அணி இழந்ததெனக் கூறப்படும் விமர்சனம் தவறானதென இந்திய அணித் தலைவர் டோனி தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் ஒரு விடயம் வழக்கமாக நடந்து வரு கிறது. இந்திய கிரிக்கெட் அணிக்கு எப்பொழுது எல்லாம் தோல்வி ஏற்படுகிறதோ அப்போது எல்லாம் கடும் விமர்சனம் எழுவது வழக்கமாக உள்ளது.

ஏப்ரல் மாதம் நடந்த ஐ.பி.எல். போட்டிகளில் நாம் சிறப்பாக விளையாடினோம். ஓகஸ்ட் மாதம் இங்கிலாந் துக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று தொடரை இழந்தோம். இதற்கான பழி ஐ.பி.எல். மீது போடப்பட்டுள் ளது.

ஐ.பி.எல். போட்டிகள் முடிந்து 2 மாத இடைவெளிக்கு பின்னர் தான் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி பங்கேற்றது. எனவே, 20 ஓவர் போட்டிகள் வீரர்களை பாதிக்கவில்லை. சிறப்பு மருத்துவரிடம் ஆலோசித்த பிறகே, இந்திய அணியில் கவுதம கம்பீர் சேர்க்கப்பட்டார். அவருக்கு இந்தத் தொடரில் விளையாட அதிர்ஷ்டம் இல்லை என்றே சொல்ல வேண்டும். அவர் நாடு திரும்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது வருத்தம் அளிக்கிறது. சச்சினுக்கு ஓய்வு அளிக்கப்படும் போது, ராவிட்டுக்கு வாய்ப்பு அளிக்கப்படும். டெஸ்ட் போட்டியில் ஏற்பட்ட தோல்வியை மறந்து, ஒருநாள் தொடரில் சாதிக்க முயற்சிப்போம் எனத் தெரிவித்தார்.

# 105 ஓட்டங்களுக்குள் சுருண்டது இலங்கை அணி



(காலி)

இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுக்கு இடையில் காலி மைதானத்தில் இடம்பெற்று வரும் முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று அவுஸ்ரேலிய பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் இலங்கை அணி 105 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

நேற்றைய தினம் தனது முதலாவது இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியின் ஆரம்ப வீரர்களாக பரணவிதான, டில்ஷான் இருவரும் களமிறங்கினர். எனினும் அணித் தலைவர் டில்ஷான் 4 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் ஹோப்லான்டின் பந்து வீச்சில் பொன்டிங்கிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

இவரின் பின்னர் வந்த வீரர்களும் சோபிக்கத் தவறி குறைந்த ஓட்டங்களுடன் வெளியேறினர். இதில் பரணவிதான 29, சமரவீர 26, சங்கக்கார 10, ஜெயவர்த்தன 11 ஆகியோர் கூடுதலான ஓட்டங்களைப் பெற்ற அதேவேளை மத்தியூஸ் 5, ரன்டீவ் 9, லக்மல் 2, வெலகெதர 1, ஜெயவர்த்தன, ஹேரத இருவரும் ஓட்டம் எதனையும் பெறாமலும் ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் லயன் 5, வட்சன் 3, ஹோப்லன்ட் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தனது 2ஆவது இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் அவுஸ்ரேலிய அணி நேற்றைய ஆட்டநேர முடிவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

அவ்வணி சார்பாக வட்சன், ஹடின் ஓட்டம் எதனையும் பெறாமலும் ஹக்கீஸ் 28, பொன்டிங் 4, கிளார்க் 60, மைக்கல்ஹசி 15, ஓட்டங்களைப் பெற்றுள்ள அதேவேளை ஹவாஜா 2, ஜோன்சன் 3 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பந்து வீச்சில் ஹேரத் 3, வெலகெதர, லக்மல், டில்ஷான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இன்று ஆட்டத்தின் 3ஆம் நாளாகும்.

# அலெக்சன் ஞாபகார்த்த கரப்பந்தாட்டம் காலிறுதிக்கு மூன்று அணிகள் தெரிவு

(மட்டுவில்)

அலெக்சன் ஞாபகார்த்தமாக கைதடி வடக்கு நவ.சனசமூக நிலையமும், நவ சக்தி விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி யின் முதல் சுற்றுப் போட்டியில் தென்ம ராட்சிப் பிரிவில் மட்டுவில் கண்ணகி வி.கழக அணியும், கைதடி மின்னொளி வி.கழக அணியும் யாழ்.மாவட்டப் பிரி வில் கோப்பாய் ஐக்கிய வி.கழக 'ஏ' அணியும் வெற்றி பெற்றுக் காலிறுதிக் குத் தகுதி பெற்றுள்ளன.

கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற இப்போட்டியில் தென்மராட்சிப் பிரிவில் கைதடி சித்திவிநாயகர் வி.கழக அணியை எதிர்த்து மட்டுவில் கண்ணகி வி.கழக அணி மோதியது.

இதில் மட்டுவில் கண்ணகி வி.கழக அணி 2:1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றைய போட்டியில் கைதடி மின் னொளி வி.கழகத்தை எதிர்த்து கைதடி சரஸ்வதி வி.கழக அணி மோதியது. இதில கைதடி மின்னொளி வி.கழக அணி 2:1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற் றது.

யாழ்.மாவட்டப் பிரிவில் கோப்பாய் ஐக்கிய வி.கழக 'ஏ' அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் வி.கழக 'பி' அணி மோதியது.

இதில் கோப்பாய் ஐக்கிய வி.கழக 'ஏ' அணி 2:1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் தென்மராட்சிப் பிரிவில் மோகனதாஸ் வி.கழக 'ஏ' அணியும், யாழ். மாவட்டப் பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் 'ஏ' அணியும் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற் றுள்ளது.

இப்போட்டியில் மோகனதாஸ் வி.கழக 'ஏ' அணியை எதிர்த்து கைதடி வளர்மதி வி.கழக அணி மோதியது.

இதில் மோகனதாஸ் 'ஏ' அணி 2:1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றது. யாழ்மாவட்டப் பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் 'ஏ' அணியை எதிர்த்து நாயன் மார்கட்டு பாரதி வி.கழக அணி மோதியது.

இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் 'ஏ' அணி 2:0 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

எதிர்வரும் 4ஆம் திகதி நடைபெற வுள்ள காலிறுதிப் போட்டியில் தென்ம ராட்சிப் பிரிவில் மட்டும் ஜங்கரன் வி.கழக அணியை எதிர்த்து மட்டுவில் கண்ணகி வி.கழக அணியும், யாழ்மாவட்டப் பிரிவில ஆவரங்கால் இந்து இளைஞர் 'பி' வி.கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன் வி.கழக அணி மோதவுள்ளது. (118)





முக்கோண வெற்றிக் கிண்ண இறுதிப் போட்டியில் 2ஆம் இடத்தைப் பெற்ற யாழ்.சென்றல் அணித் தலைவர் ச.விமலகாந் வெற்றிக் கிண்ணத்தைப் பெறுவதையும், தொடர்நாயகனுக்கான வெற்றிக் கிண்ணத்தை யாழ்.சென்றல் அணியைச் சேர்ந்த வி.றஜீவ்குமார் பெற்றுக்கொள்வதையும், சிறந்த வீரருக்கான வெற்றிக் கிண்ணத்தை ஜொலிஸ்ரார் அணியைச் சேர்ந்த வி.மணிவண்ணன் பெற்றுக் கொள்வதையும் காணலாம். (07)

# அமரர் பிரபாகரன் ஞாபகார்த்த துடுப்பாட்டம் மகேசன் அணியை வீழ்த்தியது ஐங்கரா அணி

(தும்பளை)

தும்பளை விவேகானந்தா விளை யாட்டுக்கழக முன்னாள் கழக வீரர் அம ரர் இரா.பிரபாகரன் ஞாபகார்த்த மென் பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் முதல் சுற்று ஆட்டமொன்றில் மகேசன் அணியை ஐங் கார அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றி கொண்டது.

கடந்த திங்கட்கிழமை மாலை 4 மணி யளவில் ஆரம்பமான போட்டியில் நாண யச் சுழற்சியில் வெற்றி பெற்ற மகேசன் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மா னித்தது. அதற்கமைய நிர்ணயிக்கப்பட்ட 15 ஓவர்கள் நிறைவில் ஏழுவிக்கெட்டுக் களை இழந்து 105 ஓட்டங்களைப் பெற் றது. மகேசன் அணியின் ஆரம்பத் துடுப் பாட்ட வீரர்கள் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தத் தவறியதால் விரைவாக விக்கெட்டுக்கள் பறிகொடுக்கப்பட்டது. எனினும் நடுவரிசைத் துடுப்பாட்ட வர்ர் கள் அதிரடியாக விளையாடி அணியை ஸ்திரமான நிலையை அ... உதவினர்.

இதில் ஜெயபரன் ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களையும், கணேஸ் 23 ஓட்டங் களையும், கபிலன் 17 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்த னர்.


ஐங்கரா அணிசார்பாக பந்து வீசிய துஷ்யந்தன் 16 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், கபிலன் 18 ஓட் டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்க ளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த ஐங்கரா அணி சார்பில் ரகு 25 ஓட்டங் களையும், கபிலன் 14 ஓட்டங்களையும், விதுஷன் 15 ஓட்டங்களையும் பெற்றனர் ஐங்கரா அணியினர். 15 ஓவரின் கடை சிப் பந்து வீச்சிலேயே அதிரடியான ஆறு ஓட்டங்களுடன் தனது வெற்றியை உறுதி செய்ததால் ஆட்டம் மிக விறுவிறுப்பாக வும், பார்வையாளர்களைக் கவர்ந்த போட்டிகளில் ஒன்றாகவும் அமைந்தது குறிப்பிடத்தக்கது.

மகேசன் அணி சார்பில் பந்து வீச்சில் கபிலன் 21 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், ஜோதி 2 விக் கெட்டுக்களையும் பெற்றனர்.

இப்போட்டியில் வெற்றியீட்டியதன் மூலம் ஐங்கரா அணி இரண்டாம் சுற்றுப் போட் டிக்கான வாய்ப்பைத் தக்கவைத்துக் கொண்டது. (62)

# முக்கோண வெற்றிக்கிண்ணம் கைப்பற்றியது ஜொலிஸ்ரார்



(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் முதலாவது ஆண்டாக நடத்திய சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்று முன் தினம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதா னத்தில் நடைபெற்றபோது, ஜொலிஸ்ரார அணி, யாழ்.சென்றல் அணியை 7 விக் கெட்டுக்களால் வெற்றி பெற்று முக்கோண வெற்றிக்கிண்ணத்தை முதல்முறையாகக் கைப்பற்றியுள்ளது. முதலில் துடுப்பெ டுத்தாடிய யாழ்.சென்றல் அணி 36.2 ஓவர் களில் சகல இலக்குகளையும் இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது.

றஜீவ்குமார் 25, கலிஸ்ரன் 27, சுதர் ஸன் 19, பாவேந்திரா 11, சுபாதீஸ் 12 ஓட்டங்களைப் பெற்றனர். வி.மணிவண் ணன் 7.2 ஓவர்களில் 27 ஓட்டங்களைக் கொடுத்து 6 இலக்குகளைக் கைப்பற்றி னர்.

மேற்படி வெற்றிக்கிண்ணப் போட்டி சாதனையாகப் பதிவாகியுள்ளது. பதிலுக் குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 16 ஓவர்களில் 3 இலக்குகளை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது. மதுஸன் 31, கிறிஸ்சோபன் ஆட்டமிழக் காது 29, கார்த்திக் 62 ஓட்டங்களைப் பெற றனர். யசின்தன், சுபாதீஸ், விமலகாந் தலா 1 இலக்கினைக் கைப்பற்றினர். இறுதிப் போட்டியில் சிறந்த வீரராக ஜொலிஸ்ரார் அணியைச் சேர்ந்த வி.மணிவண்ணனும், தொடர்நாயகனாக யாழ்.சென்றல் அணி யைச் சேர்ந்த வி.றஜீவ்குமாரும், 2ஆம் இடத்தை யாழ்.சென்றல் அணியும், முத லாம் இடத்தை ஜொலிஸ்ரார் அணியும் பெற்றுக்கொண்டது. வெற்றியைச் சுவைத்த வீரர்களுக்கு பிரதம விருந்தினர் எஸ்.பி. றஜீவன் கேடயங்களை வழங்கிக் கௌர வித்துள்ளார். (07)

# கிரிக்கெற் சுற்று இறுதிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை பாரதி விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி நாளை பி.ப.3 மணிக்கு மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவுத் தலைமையதிகாரி குணசிங்க விசேட அதிதியாகவும், சமூகசேவையாளர் எம்.ஸி.எம்.அமீன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (105)

# டில்லியில் நடைபெறும் ஹொக்கி தொடரை வேறு நாடுகளுக்கு மாற்றக் கூடாது

## இந்திய ஒலிம்பிக் சங்கம் எச்சரிக்கை

டில்லியில் நடக்கவுள்ள சம்பியன்ஸ் தொடரை வெளிநாடுகளுக்கு மாற்றுவது போன்ற செய லில் சர்வதேச ஹொக்கி அமைப்பு ஈடுபடக் கூடாது என, இந்தியன் ஒலிம்பிக் சங்கத்தின் தற்காலிகத் தலைவர் மல்கோத்ரா எச்சரித்து ள்ளார். ஜெர்மனி, அவுஸ்ரேலியா உள்ளிட்ட 8முன்னணி அணிகள் பங்கேற்கும் சம்பியன்ஸ் டிராபி ஹொக்கித் தொடர், இந்தியாவில் வரும டிசெம்பர் 3 முதல் 11 வரை நடக்கவுள்ளது. இதனிடையே இந்திய ஹொக்கி கூட்டமைப்பு, ஹொக்கி இந்தியா இடையிலான இணைப்பு முயற்சி இன்னும் முடியவில்லை. இவ்வாறு ஹொக்கி நிர்வாகங்கள் இடையில் பிளவு இருப்பதால், தொடரை இந்தியாவில் இருந்து மாற்றும் முயற்சியில் ஈடுபடுவதாகத் தெரி கிறது. இதுகுறித்து மல்கோத்ரா கூறியது:

இந்தியாவின் தேசிய விளையாட்டு ஹொக்கி. இதற்கு கோடிக்கணக்கான இரசிக ர்கள் உள்ளனர். சாதனை வீரர் தயான் சந்த் பெயரிலான மைதானத்தில், சர்வதேச அளவில் சிறப்பான அணிகள் பங்கேற்கும் தொடரை, பார்க்க ஆவலுடன் காத்திருக்கி ன்றனர். இங்குள்ள ஹொக்கி நிர்வாகங்கள் இணைப் புக்கும், இத்தொடருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. எப்.ஐ.எச். அமைப்பு, ஹொக்கி இந்தியா, ஐ.ஓ.ஏ. உடன் தொடர் ந்து தொடர்புகொள்ளலாம். அரசுடன் இது குறித்துப் பேசத்தேவையில்லை. ஏற்கனவே உலகக்கோப்பைத் தொடர், கொமன் வெல்த் ஹொக்கி போட்டிகள் சிறப்பாக நடந்தது. இந் நிலையில் சம்பியன்ஸ் டிராபி தொடரை விட்டுத் தரமுடியாது. இத்தொடரை இங்கு நடத்துவது ஹொக்கி விளையாட்டின் வளர் ச்சிக்கு நன்கு உதவும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சிம்பாப்வே செல்கிறது நியூசிலாந்து அணி

நியூசிலாந்து கிரிக்கெட் அணி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் தமது நாட்டிற்கு விஜயம் செய்யவுள்ளதாக சிம்பாப்வே கிரிக்கெட் நிறுவனம் அறிவித்துள்ளது.

சிம்பாப்வே அணியுடன் இரண்டு 20 இற்கு 20 போட்டிகள், மூன்று சர்வதேச ஒருநாள் போட்டிகள் மற்றும் ஒரு டெஸ்ட் ஆகிய போட்டித் தொடர்களில் நியூசிலாந்து விளையாடவுள்ளது.

நியூசிலாந்து அணி இறுதியாக 2005 ஆம் ஆண்டு ஸிம்பாப்வேக்கு விஜயம் மேற்கொண்டு இரண்டு டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் மற்றும் முத்தரப்பு ஒருநாள் போட்டி தொடரில் விளையாடியிருந்தது.

# இந்திய கடற்படையினரின் கண்காணிப்பை அடுத்து கொழும்பு துறைமுகத்திற்கு சென்ற சீன உளவுக்கப்பல்

(கொழும்பு)

மீன்பிடி ரோலர் படகைப் போல் பயணித்த சீனாவின் உளவு சேவைக்கு சொந்தமான கப்பலை இந்திய கடற்படையினர் கண்காணித்ததையடுத்து அந்தக் கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்குள் பிரவேசித்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எவ்வாறாயினும் இத்தகைய படகொன்று கொழும்புத் துறைமுகத்திற்கு வந்தமை தொடர்பாக தமக்கு அறிவிக்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளும், துறைமுக அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.

22 தினங்களுக்கு முன்னதாக சிறிய அந்தமான் தீவுகளை அண்மித்த கடற்கரைக்கு அருகில் மீன்பிடி ரோலர் படகைப் போன்று பயணித்த சீனாவின் உளவு சேவைக்கு சொந்தமான இந்தக் கப்பலை இந்திய கடற்படையினர் கண்டுபிடித்தாக என்.டி.டி.வி தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச கடல் எல்லையில் இருந்த இந்தக் கப்பலை இந்தியப் படையினர் பின்தொடர்ந்துள்ளதுடன் அதிலிருந்து விடுபட்ட கப்பல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்ததாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் 22 ஆய்வு கூடங்களைக் கொண்டுள்ளது என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தக் கப்பல் மூலம் இந்து சமுத்திரத்தின் வரை படம் வரையப்பட்டு அதில் முக்கிய தகவல்கள் சேகரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சேகரிக்கப்படும் விபரங்கள் நீர் மூழ்கிக் கப்பல்களின் செயற்பாடுகளுக்ும் ரோபிடோ (TROPEDO) தாக்குதல்களை நடத்துவதற்கும் உதவும் என இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

# எண்ணெய் இறக்குமதி,விற்பனை பரிசீலிக்க அமைச்சரவைக் குழு

(கொழும்பு)

எண்ணெய் இறக்குமதி மற்றும் விற்பனை தொடர்பாக பரிசீலிப்பது தொடர்பான ஐவர் அடங்கிய அமைச்சரவைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் அனுமதியுடன் அமைக்கப்பட்ட இந்தக் குழுவிற்கு சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச.எம் பௌசி தலைமை தாங்குகிறார்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சரவை குழுவின் ஏனைய உறுப்பினர்களாக அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த,சம்பிக்கரணவக்க, ஜோன் செனவிரத்ன மற்றும் டிலான் பெரேரா,ஆகியோர் அடங்குகின்றனர்.

இந்த நிலையில், நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் எண்ணெய்யும், அதன் விற்பனைகளையும் சோதனை செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக சிரேஷட அமைச்சர் ஏ.எச்.எம் பௌசி குறிப்பிட்டார்.

# 8 மாதங்களில் 189 மருந்தகங்களுக்கு எதிராக வழக்கு சுற்றிவளைப்புக்களை தொடர அமைச்சர் ஆலோசனை



(கொழும்பு)

தேசிய மருந்துகள் மற்றும் வாசனைத் திரவியங்கள் சட்டத்தை மீறும் வகையில் மக்களுக்கு மருந்து வகைகளை விற்பனை செய்யும் மருந்தகங்களை சுற்றிவளைப்பதற்கான நடவடிக்கையை தொடர்ந்தும் முன்னெடுக்குமாறு சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன ஆலோசனை வழங்கியுள்ளார்.

தேசிய மருந்துகள் மற்றும் வாசனைத் திரவியங்கள் அதிகாரசபை இந்த சுற்றிவளைப்புகளை தொடர்ந்தும் முன்னெடுத்துவருவதாக சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த எட்டு மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைபபுகளின் போது 189 மருந்தகங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்படாமை, அனுமதிப் பத்திரங்கள் புதிப்பிக்கப்படாமை, மருத்துவர்களின் பரிந்துரைகள் இன்றி மருந்து விநியோகிக்கப்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் இந்த வழக்குகள் தொடரப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதனைத்தவிர உரிய வெப்பநிலையின் கீழ் ஊசி மருந்துகள் களஞ்சியப் படுத்தப்படாமை மற்றும் சுற்றிவளைப்பு மேற் கொள்ளப்படும் போது மருந்தாளர்கள் சேவையில் ஈடுபடுத் தப்பட்டிருக்காமை ஆகிய விடயங்களுக்கு அமைவாகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இரண்டு வழிகளில் அரசாங்கம் முயற்சி

## ரஜீவ விஜேசிங்க எம்.பி .கூறுகிறார்



(கொழும்பு)

**இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இரண்டு வழிமுறைகளில் முயற்சிக்கப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,**

நாட்டின் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முயற்சி செய்து வருகின்றார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சில தரப்பினர் சிங்களத் தலைவராக அடையாளப்படுத்திய போதிலும், இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த அவர் முயற்சி எடுத்து வருகின்றார்.

அதன் ஓர் கட்டமாக தமிழ் மொழியை ஜனாதிபதி பயின்று வருகின்றார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான முறையில் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தை மற்றும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு என இரண்டு வழிமுறைகளில் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிக்கப்படுகிறது.

குரோத உணர்வுடனோ, பழி வாங்கும் உணர்வுடனோ பிரச்சினைகளை அணுகக் கூடாது.

நாட்டில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளை இந்திய மற்றும் தமிழக அரசாங்கங்கள் கவனத்திற்கொள்ள வேண்டும.


விடுதலைப் புலிகளின் பிரசாரங்களுக்கு மட்டும் செவிமடுத்தல் பொருத்தமாகாது.

இறுதிக் கட்டபோரின் போது பொது மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து விசாரணை நடத்தப்பட உள்ளது.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# கடலுக்கடியிலான மின் இணைப்பு இதுவரை முடிவு எதுவும் இல்லை

## என்கிறார் அமைச்சர் சம்பிக்க



(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கடலுக்கு அடியிலான மின் இணைப்பை ஏற்படுத்தும் திட்டம் குறித்து இன்னமும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லையென மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சேது சமுத்திரத்திட்டம் காரணமாக இந்தியா இந்த விவகாரம் குறித்து முடிவு செய்வதில் தாமதம் ஏற்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

தென்னிந்தியாவுக்கும் மன்னாருக்கும் இடையில் கடலுக்கு அடியிலான மின் இணைப்பை உருவாக்குவது குறித்த சாத்திய ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டதாகவும், ஆனால் சேது சமுத்திரத் திட்டம் காரணமாக இது பற்றி இந்தியா இறுதி முடிவு எடுக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சேது சமுத்திரத்திட்டம் நிறைவேற்றப்படுமானால், கடலின் மிக ஆழத்தில் மின் இணைப்பை உருவாக்க வேண்டும், அதற்கான செலவுகள் மிகஅதிகமாக இருக்கும் என்றும் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை சம்பூர் அனல்மின் நிலையக் கட்டுமானத்திட்டம் தொடர்பான உடன்பாடு எதிர்வரும் 6ஆம் திகதி கையெழுத்திடப்படவுள்ளதாகவும், இதற்கென இந்திய மின்சக்தி அமைச்சின் செயலர் தலைமையிலான அதிகாரிகள் குழுவொன்று இலங்கை வரவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அரச மருந்தாக்கல் கூட்டுத் தாபனத்தில் மோசடியில் ஈடுபட்ட இருவர் பணி நீக்கம்

(கொழும்பு)

மருந்து மோசடி தொடர்பில், அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் மற்றும் மருந்து விலைமனுக் கோரலுக்கு பொறுப்பான எழுதுவினைஞர் ஆகியோரை தற்காலிக பணி நீக்கம் செய்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிடுகிறது.

தரமற்ற மருந்து இறக்குமதி மற்றும் உரிய விலைமனுக்கோரல் நடைமுறைக்கு மாறாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை ஆகிய காரணங்களுக்காக குறித்த இரண்டு பேரையும் தற்காலிக பணி நீக்கம் செய்துள்ளதாக அமைச்சு குறிப்பிடுகிறது.

அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின்போது இவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் சட்டமா அதிபரின் பரிந்துரை மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக சுகாதார அமைசச்சு தெரிவித்துள்ளது.

# சர்வதேச ரீதியாக அரசைக் கவிழ்ப்பதற்கு சிலர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்

## அமைச்சர் பஷில் குற்றச்சாட்டு



(கொழும்பு)

தேசிய மட்டத்தில் அரசாங்கத்தை கவிழ்க்க முடியாத சிலர் சர்வதேசரீதியாக அரசாங்கத்தை வீழ்ச்சியடையச் செய்ய முயற்சிப்பதாக அமைச்சர் பஷில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தெவிநுவர பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது.

மக்கள் சேவையை நிறுத்துவதற்கு எந்தவொரு சக்திக்கும் இடமளிக்கமுடியாது எனவே பொதுமக்கள் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பாக அவதானத்துடன் செயற்படவேண்டுமெனவும் அவர்மேலும் தெரிவித்தார்.

# இலங்கையில் சைஃபர் தாக்குதல்?

(கொழும்பு)


இலங்கையில் இருந்து சை.்.பர் தாக்குதல் நடத்தப்பட்டதாக வெளியான தகவல் குறித்து ஆராயவுள்ளதாக சர்ட் எனப்படும் இலங்கை கணினி அவசரப் பிரிவு குறிப்பிடுகிறது.

இவ்வாறு சை.்.பர் தாக்குதல் நடத்தப்பட்டதாக இதுவரை உறுதியான தகவல்கள் கிடைக்கவில்லை என அதன் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ரோஹன பல்லியகுரு குறிப்பிட்டுள்ளார்.

சை.்.பர் தாக்குதல் நடத்தப்பட்டிருக்குமாயின் சர்வதேச மட்டத்தில் தமது நிறுவனத்திற்கு முறைப்பாடு கிடைத்திருக்கும் எனவும் அவர் குறிப்பிடுகிறார்.

எவ்வாறாயினும் இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சர்ட் நிறுவனம் தெரிவிக்கிறது.

கொழும்பு கல்வி வலயம்




# க.பொ.த. சா/த பரீட்சை - 2011

நேரம்: 1 மணித்தியாலம்


# கல்வி முரசு O/L

## வரலாறு - பகுதி I



யாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்

**மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. கீழ்வரும் இலங்கைப் படத்தைப் பயன்படுத்தி இலக்கம 1-5 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**




1. வசப மன்னனால் கட்டப்பட்ட அலகர அணையினைக் குறிப்பிடும் எழுத்து
   1. A  2. E  3. D  4. H


2. சங்கமித்தை பிக்குனியுடன் இலங்கைக்கு வந்த குழுவினர் வந்திறங்கிய ஜம்பு கோள பட்டண துறைமுகம் எந்த எழுத்தினால் காட்டப் படுகிறது.
   1. L  2. G  3. J  4. B

3. 1 ஆம் விஜயபாகு மன்னன் சோழருடன் யுத்தம் செய்ய தம்மை தயார் செய்த இடம் 'M' என்ற எழுத்தினால் குறிக்கப்பட்டுள்ளது. அந் நகரம் எது?
   1. மாகம  2. மாத்தறை
   3. கொடவாய  4.மகானாநகுல

4. இலங்கையின் தென் மேற்குப் பிரதேசத்தில் அமைந்த ஒரு இராசதானிய சுந்தரகிரி என்னும் யாப்பகுவ அமைந்துள்ள இடத்தைக் காட்டும் எழுத்து.
   1. C  2. P  3. S  4. K

5. பண்டைய காலம் தொட்டு இந்து சமயம் இலங்கையில் நிலவியுள்ளது என்பதைக் காட்டும் திருக்கோணேஸ்வர ஆலயம் அமைந்துள்ள இடத்தைக் காட்டும் எழுத்து.
   1. S  2. G  3. F  4. C

**இலக்கம் 6-10 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்காக கீழேயுள்ள உலகப்படத்தைப் பயன்படுத்தவும்**



6. 20 ஆம் நூற்றாண்டில் பலம் வாய்ந்த ஆசிய நாடுகளுள் ஒன்றான ஜப்பான் படத்தில் எந்த எழுத்தால் காட்டப்பட்டுள்ளது.
   1. A  2.B  3. C  4. D

7. சியங்காய்செக் மூலம் கட்டியெழுப்பப்பட்ட தாய்வானைக் காட்டும் எழுத்து
   1. E  2. F  3. G  4. H

8. 2 ஆம் உலக மகாயுத்தத்தின்போது ஜப்பானின் குண்டுத்தாக்குதலுக்குள்ளான துறைமுகம் 'J' எழுத்தால் காட்டப்பட்டுள்ளது. அது எது?
   1. பால் துறைமுகம்  2. நிவ்யோர்க் துறைமுகம்
   3. டோக்கியோத் துறைமுகம்  4. பொஸ்டன் துறைமுகம்

9. 1 ஆம் உலக மகாயுத்தத்தின் முடிவின்போது நிர்மாணிக்கப்பட்ட பொலிஸ் கொறிடோரின் மூலம் தொடர்புபடுத்தப்பட்ட டான்சிக் துறைமுகத்தைக் காட்டும் எழுத்து
   1. K  2. L  3. M  4. N

10. ஐக்கிய நாடுகள் சபையின் தற்போதைய செயலாளரான திரு.பாங்கிமூன் அவர்கள் எந்த எழுத்தால் காட்டப்படும் நாட்டைச் சேர்ந்தவர்.
   1. A  2. P  3. R  4. C

11. வங்காளி எனும் செய்திப் பத்திரிகையின் ஆசிரியரான இவர் இந்திய தேசிய காங்கிரஸின் தந்தையாக குறிப்பிடப்படுகின்றார். இக் கூற்றுக்குப் பொருத்தமான வராக உள்ளவர்.
   1. மகாத்மா காந்தி  2. சுரேந்திரநாத் பானர்ஜி
   3. சடபாய் நபரோஜ்  4. லாலா லக்பதி ராய்

12. மொஹமட் அலி ஜின்னா அவர்கள் முஸ்லிம்களால் என்றும் மறக்க முடியாத வராக இருப்பதற்குக் காரணம்
   1. முஸ்லிம்களுக்கு இந்தியாவிலிருந்து மக்காவிற்கு செல்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தமை.
   2. முஸ்லிம்களுக்கு வாழ்வதற்கென வெறொரு நாடாக பாகிஸ்தானை உருவாக்கிக் கொடுத்தமை
   3. முஸ்லிம்களுக்கு சுதந்திரமாக பிரார்த்தனை செய்வதற்குச் சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொடுத்தமை.
   4. முஸ்லிம்களுக்கு உலகத்தில் எந்த நாட்டுடனும் வியாபாரம் செய்வதற்குரிய வசதிகளைச் செய்து கொடுத்தமை.

13. பிரித்தானியர் தமது குடியேற்றவாதத்தின்போது கையாண்ட உபாயங்கள் எது?
   1. சகல இனங்களுக்கிடையேயும் சமாதானத்தை நிலைநிறுத்த அறிவுரை வழங்கியமை.
   2. பௌத்தம், இஸ்லாம், இந்து, கத்தோலிக்க சமயங்களுக்கிடையே ஒற்றுமையை நிலைநிறுத்தியமை.
   3. பிரித்தானியாவிலுள்ள ஆட்சியமைப்பு முறையினை குடியேற்ற நாடுகளுக்கிடையே பரவச் செய்தல்.
   4. குலவேறுபாடு, சமய வேறுபாடு, இன வேறுபாடு என்பவற்றை அவர்களிடையே ஏற்படுத்திப் பிரித்தாளும் கொள்கையை கடைப்பிடித்தமை.

14. இந்தியாவில் சுதந்திரப் போராட்டத்திற்கு முன்னோடியாக அமைந்த கிளர்ச்சியாகக் கருதப்படுவது.
   1. இந்தியா -பாகிஸ்தான் கலகம்  2. சிப்பாய்கள் கலகம்
   3. இந்திய - பஞ்சாப் கலகம்  4. கஷ்மீர் கலகம்

15. சுதேசிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அகிம்சை முறையிலான சத்தியாக் கிரகத்தை' ஆரம்பித்து வைத்தவர்
   1. தடாபாய் நவரோஜ்  2. சத்திய ஶ்ரீ சாயிபாபா
   3. மகாத்மா காந்தி  4. ஜவர்கர்லால் நேரு

16. இந்தியர்களுடைய அர்ப்ப்ணிப்பின் பெறுபேறாக இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டது. இந்தியா சுதந்திரம் பெற்ற தினம்
   1. 1947 ஓகஸ்ட் 15ஆம் திகதி
   2. 1946 ஓகஸ்ட் 10 ஆம் திகதி
   3. 1947 ஓகஸ்ட் 18 ஆம் திகதி
   4. 1947 ஓ[illegible]ஸ்ட் 21 ஆம் திகதி

17. மேற்குலகினருக்கு இந்தியாவின் கதவு திறந்துவிடப்பட்ட ஆண்டான 1498 இல் கள்ளிக்கோட்டையை அடைந்தவர்.
   1. லொறன்ஸ் ஓத அல்மேய்தா
   2. ஸ்பிளபர்ஜன்
   3. ஹென்றி வில்லியன்
   4. வஸ்கொடகாமா

18. ரூசோ, தோமஸ் ஜோன், வோஜ்டேயர், மொண்டஸ்கியு, கரிபோல்ட் என் போரின்தாராண்மைக் கொள்கையினை இந்தியர்கள் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக அமைந்த காரணியாது?
   1. இந்தியாவுக்கு சுதந்திரம் கொடுத்தமை
   2. மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரகம்
   3. ஆங்கிலக் கல்வியைப் பெற்றுக்கொண்டமை
   4. இந்தியர்களின் அர்ப்பணிப்பு

19. மகாத்மா காந்தியின் வேண்டுகோள்களில் ஒன்று
1. தாழ்த்தப்பட்ட சமூகத்தினரை (ஹரிஜனம்) நாட்டிலிருந்து வெளியேற்றுதல்
2. தாழ்த்தப்பட்டோருக்கு ஒரு பிரதேசத்தைப் பெற்றுக்கொடுத்தல்.
3. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு (ஹரிஜனம்) தண்டனை வழங்குதல்.
4. தாழ்த்தப்பட்ட மக்களின் (ஹரிஜனம்) சகல அம்சங்களையும் உயர்வடையச் செய்தல்.

20. ஆயுதங்களின்றி அகிம்சை முறையில் பிரித்தானியருக்கு எதிராகப் போராட்டம் நடத்திய நாடு.
1. ஜப்பான்  2. ஜேர்மன்  3.இந்தியா  4.வியட்நாம்

21. மத்திய ஐரோப்பிய வல்லரசு நாடுகளாவன
   1. ஜேர்மன், இத்தாலி, பிரான்ஸ்
   2. ஜேர்மன், இத்தாலி, ஆஸ்திரியா
   3. ஆஸ்திரியா, இத்தாலி, ரஷ்யா
   4. ஆஸ்திரியா, ரஷ்யா, ஜேர்மன்

22. 1 ஆம் நிரலிலுள்ள நாடுகளோடு தொடர்புள்ளவர்களைச் சரியான முறையில் 2 ஆம் பகுதியிலிருந்து தெரிவு செய்க.

| நிரல் I | நிரல II |
|---|---|
| A ஐக்கிய அமெரிக்க நாடுகள் | E கிளைமன் ஷோ |
| B பிரித்தானியா | F லொயிட் ஜோஜ் |
| C பிரான்ஸ் | G ஓலொண்டோ |
| D இத்தாலி | H வூட்ரோ வில்சன் |

1. EFGH  2. EGFH  3.HFEG  4.HEFG

23. ஆட்களை ஏற்றிச் சென்ற லுசித்தானியா எனும் பெயருடைய கப்பல் ஜேர்மனியரால் வடகடலில் மூழ்கடிக்கப்பட்டது. இக்கப்பலுக்கு உரித்தான நாடு எது?
1. பிரான்ஸ்  2. இங்கிலாந்து 3. இத்தாலி  4. அமெரிககா

24. 1ஆம் உலக மகாயுத்தம் நடந்த கால எல்லையைக் கீழ் வருவனவற்றிலிருந்து சரியானதை தெரிவு செய்க.
   1. கி.பி 1914 - 1919 வரை
   2. கி.பி 1914 - 1920 வரை
   3. கி.பி 1913 - 1918 வரை
   4. கி.பி 1914 - 1918 வரை

25. நட்பு நாடுகள் அணிக்குள் அடங்கும் நாடுகளாவன
   1. ஜேர்மன், பிரான்ஸ், இத்தாலி
   2. ஆஸ்திரியா, ரஷ்யா, பிரான்ஸ்
   3. பிரான்ஸ், இங்கிலாந்து, ரஷ்யா
   4. சேர்பியா, ஜேர்மன், பிரான்ஸ்

26. கி.பி.1919 இல் அமெரிக்க ஜனாதிபதி வூட்ரோவில்சன் ஆலோசனையின் பேரில் சர்வதேச சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. சர்வதேச சங்கத்தின் ஆரம்ப அங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கை
   1. 32  2. 51  3. 41  4. 42

27. பாசிசவாதத்தினை ஆரம்பித்தவர்
    1. அடோல்ப் ஹிட்லர்    2. கைசர்
    3. ஓட்டோமன் பிஸ்மார்க்    4. பெனிட்டோ முசோலினி

28. 1 ஆம் உலக மகாயுத்தத்திற்கான உடனடிக் காரணம்
    1. பலம் வாய்ந்த அரசுகளின் நட்பு உடன்படிக்கை
    2. ஒருவர் ஒருவரை தோற்கடித்து யுத்த பலத்தை மேம்படுத்துவதற்காகச் செயற்பட்டமை.
    3. சரஜீவோ சம்பவம்
    4. பேர்லினிலிருந்து பக்வாத் வரையும் புகையிரதப் பாதை அமைத்தமை.

29. கி.பி 1914 யூலை 14 ஆம் திகதி சேர்பியாவுக்கு எதிராக ஆஸ்திரியா யுத்தப் பிரகடனம் செய்தது. இவ்விடயத்தில் ஆஸ்திரியாவுக்கு உதவி செய்த நாடு
    1. ஜேர்மன்    2. இங்கிலாந்து    3. ரஷ்யா    4. பிரான்ஸ்

30. 'ஒவ்வொருவருக்கும் அடிப்படையாகக் குறைந்த பட்சம் கல்வி பெற்றுக் கொள்வதற்கும் தங்களின் தொழிலுக்கு வேதனத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் உரிமை உண்டு'. மனித உரிமை சம்பந்தமாக மேற்கூறப்பட்ட பிரகடனத்திற்குப் பொருத்தமானது.
    1. பொருளாதார, சமூக, கலாசார உரிமை
    2. சிவில், அரசியல் உரிமை
    3. பொது உரிமைகளும், அடிப்படை உரிமைகளும்
    4. உரிமையையும், சுதந்திரத்தையும் அனுபவித்தல்

31. 2 ம் உலக மகாயுத்தத்திற்குக் காரணமாக அமையாதது
    1. முசோலினியினுடைய செயற்பாடு    2. ஹிட்லரின் எழுச்சி
    3. அல்சாஸ் லொறேன் பிரச்சினை    4. சர்வதேச சங்கத்தின் குறைபாடுகள்

32. 2ஆம் உலக மகா யுத்தத்தில் பங்குகொண்ட அச்சு நாடுகள் அணியில் இடம்பெறும் நாடுகளாவன.
    1. ஜேர்மன், ஜப்பான், பிரான்ஸ், இத்தாலி, ரஷ்யா
    2. பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா
    3. ஜேர்மன், பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா, இத்தாலி
    4. ஜேர்மன், இத்தாலி, ஜப்பான், ஹங்கேரி, ரூமேனியா

33. "ஆரம்பத்தில் ஆக்கிரமிப்போடு முன்னோக்கிச் சென்ற பொழுதிலும் பின்னர் தோல்வியைத் தழுவிக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது" மேற்கூறப்பட்ட கூற்றுப்படி 2 ஆம் உலக யுத்தத்துடன் தொடர்புடைய நிகழ்ச்சி எது?
    1. ரஷ்யப்படை ஜேர்மனியை ஆக்கிரமித்தல்
    2. ஜேர்மன் படை ரஷ்யாவை ஆக்கிரமித்தல்
    3. ஜேர்மன் படை போலந்தை ஆக்கிரமித்தல்
    4. ஜேர்மன் படை பிரான்ஸை ஆக்கிரமித்தல்

34. 2ஆம் உலக மகா யுத்தத்துடன் தொடர்பு இல்லாத கூற்று எது?
    1. பிரான்ஸ் கடும் சமரின்றி ஜேர்மனிக்குப் பணிந்தது.
    2. வின்சன்ட் சேர்ச்சிலின் தலைமைத்துவம் பிரிததானியரது வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தது.
    3. ஹிட்லர் உட்பட ஜேர்மன் தலைவர்கள் தமது படையினர் வெற்றியை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் சமயத்தில் தம் உயிரை மாய்த்துக் கொண்டனர்.
    4. பேர்ள் துறைமுக சம்பவமானது ஜப்பானின் அழிவுக்குக் காரணமானது.

35. யுத்தத்தின் மூலம் இத்தாலிக்கு உயர்வை ஏற்படுத்த முயன்ற பொழுதிலும் துரதிஷ்டவசமாகத் தோல்வியடைந்த பின்னர் கொலை செய்யப்பட்ட துரதிஷ்டசாலியான ஆட்சியாளர் யார்?
    1. சாள்ஸ் டிகோல்    2. ஓட்டோமொன் பிஸ்மார்க்
    3. அடோல்ப் ஹிட்லர்    4. பெரிடோ முசோலினி

36. 2ஆம் உலக மகாயுத்தத்திற்கு உடனடிக் காரணமாக அமைவது
    1. ஹிட்லரால் போலந்து ஆக்கிரமிக்கப்படல்
    2. ஜப்பானியப் படை பேர்ள் துறைமுகத்தைத் தாக்குதல்
    3. ஹிட்லர் பிரான்சை ஆக்கிரமித்தமை
    4. சரோஜிவோ சம்பவம்

37. கி.பி 1945 செப்டெம்பர் 2 ஆம் திகதி சரணடையும் கடிதத்தில் கையொப்பமிட்டதுடன் பேரழிவை ஏற்படுத்திய இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவடைந்தது. இந்தக் கடிதத்துடன் தொடர்புடைய நபர்கள்.
    1. ஹிட்லர், முசோலினி
    2. ஹிரோஹிதோ சக்கரவர்த்தியும் (பேரரசன்) மெக் ஆதர் படைத்தளபதியும்
    3. ஹிட்லரும், மெக் ஆதர் படைத்தளபதியும்
    4. ஹிரோஹிதோ சக்கரவர்த்தியும் (பேரரசன்), பிராங்ளின் ருஸ்வெல்ட்டும்

38. 2 ஆம் உலக மகா யுத்தத்தில் இறந்த ஒருவனால் கேள்விப்பட்டிருக்க முடியாத நிகழ்வைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.
    A வேர்சேல்ஸ் உடன்படிக்கை கைச்சாத்திடப்படல்
    B மார்ஷல் திட்டம் உருவாக்கப்படல்
    C சரஜிவோ சம்பவம்
    D அமெரிக்க ஐக்கிய நாடு, ரஷ்யா எனும் இரண்டு பிரதான அணிகள் உருவாக்கப்பட்டமை.

39. 2ஆம் உலக மகா யுத்தத்தின் விளைவாக நன்மையைப் போன்றே தீமையான விளைவுகளும் ஏற்பட்டன. அதன்படி நன்மையான விளைவுகளை மாத்திரம் குறிக்கும் விடை எது.
    A குடியேற்றவாதத்தின் வீழ்ச்சி
    B ஒரு கோடி 70 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்தமை.
    C ஐக்கிய நாடுகள் சபை அமைக்கப்பட்டமை'
    D உலகில் புதிய பலம்வாய்ந்த இரண்டு அணிகள் உருவானமை.
    1. A யும் C யும்    2. B யும் C யும்    3. C யும் D யும்    5. B யும் D யும்

40. இரண்டு உலகப் போர்களுக்கிடையே ஜேர்மனியில் ஆரம்பமான மக்களை இன்னலுக்குள்ளாக்கிய அரசியல் கொள்கை (இயக்கம்)
    1. நாசிசவாதம்    2. பாசிசவாதம்
    3. மானிடவாதம்    4. சமூகவாதம்

## வரலாறு - பகுதி II

நேரம் : 3 மணித்தியாலம்

1ம் பகுதிவினாவுக்கு கட்டாயம் விடையளித்தல் வேண்டும்.
2ம் பகுதியில் விரும்பிய மூன்று வினாக்களுக்கு விடைஎழுதுக.
3ம் பகுதியில் விரும்பிய இரண்டு வினாக்களுக்கு விடைஎழுதுக.
எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

### பகுதி I - A

1. கீழே 'அ" பகுதியின் கீழ் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை இலங்கைப் புறவுருவப்படத்திலும் 'ஆ' பகுதியின் கீழ் தரப்பட்டுள்ள இடங்களை உலகப் புறவுருவப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

அ. ஜம்புகோளப்பட்டுண, தேவநகர (தெவிநுவர) கோகண்ண, மகாதித்த, தீகவாபி, கொணநதி, வனவாகினி நதி, மகியங்கனை, அனுராதகாம, கல்யாணி

ஆ. போர்த்துக்கல், ஹிரோசிமா, ஹவாய்த் தீவுகள், கங்கா நதி, நன்னம்பின்கை முனை, கல்லிக்கோட்டை, பத்தேவியா, நைல் நதி.

### பகுதி I -B


கீழே A,B,C,D என்ற எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள படங்களின் உதவியுடன் கேட்கப்பட்டுள்ள விளாக்களுக்கு விடை எழுதுக.



A. 1. அருகேயுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ள நபரின் பெயரை எழுதுக.

2. இவர் எந்த நாட்டவர்

3. சுதேசிகளின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக இவரால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் எது?



B 1. அருகே தரப்பட்டுள்ள கட்டடத்தின் பெயரை. எழுதுக

2. இக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ள நகரம் எது?


3. தனது காதலியின் நினைவாக இவ்வரலாற்றுப் புகழ் கட்டடத்தை நிர்மாணித்த மன்னர் யார்?



C 1. இவ்வரைபில் காட்டப்பட்டுள்ள நபர் யார்?

2. அவரின் சொந்த நிதியை முதலீடு செய்து நிர்மாணிக்கப்பட்ட பாடசாலை ஒன்றைப் பெயரிடுக.

3. இவர் எச்சமய மறுமலர்ச்சிக்காகப் பங்களிப்புச் செய்தார்?



D. 1. இது இலங்கையின் நீர்ப்பாசனத்துறையின் விசேட நிர்மாணங்களுள் ஒன்றாகும். இது எது?

2. இதனால் மேற்கொள்ளப்படும் பிரதான சேவை எது?

3. இந்நிர்மாணம் நேரடியாகத் தொடர்புடைய நீரைத் தேவையான போதுதேவையான அளவில் விநியோகிப்பதற்கு பயன்படுத்தப்படும் குளத்தின் கூறு எது?

### பகுதி II

2) 1. இலங்கையில் ஆரம்பகால ஆரியர் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்ட ஆற்றுப்பள்ளத்தாக்குகள் மூன்றினைப் பெயரிடுக.

2. கீழே தரப்பட்டுள்ள நிர்மாணங்களுடன் தொடர்புடைய மன்னர்களைப் பெயரிடுக
    A. முதலாவது குளம்
    B. தூபாராமய
    C. சீகிரிய
    D. லொவமகாபாய

3. பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சிக்கு உதவிய இரு காரணிகளைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

4. புராதன இராசதானியின் வீழ்ச்சிக்கு உதவிய இரு காரணிகளைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

3) 1. இலங்கையின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு உதவக்கூடிய தொல்பொருள் மூலாதாரங்கள் மூன்றினைப் பெயரிடுக.

2. கீழைத்தேய, மேலைத்தேய நாடுகளுடன் இலங்கை தொடர்புவைத்திருந்தது என்பதற்கு சான்றாக பின்வரும் வரலாற்று மூலாதாரங்களை எழுதிய வரலாற்று ஆசிரியர்களைப் பெயரிடுக.
    1. இந்திகா    2. நவ்ரோலிஸ் ஹிஸ்டோரியா
    3. B மொண்டோ    4. டோபோ கிரபியா கிரிஸ்டியானா

3. வரலாற்று மூலாதாரங்களுள் கல்வெட்டுக்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. இலக்கிய மூலாதாரங்கள் மூலம் பெற்றுக்கொள்ள முடியாத தகவல்கள் கல்வெட்டுக்கள் மூலம் பெறப்படுகின்றது. அவ்வாறான இரு கல்வெட்டுக்களைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

4. புராதன இலங்கையின் அபிவிருத்தி பற்றி கற்கும்போது வரலாற்று மூலாதாரங்கள் மூலம் அறியக்கிடைக்கும் இரு துறைகளைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

4) 1. கி.பி 1500 இல் போர்த்துக்கேயர் வரும்போது இலங்கையில் காணப்பட்ட மூன்று இராசதானிகளையும் குறிப்பிடுக.

2. பின்வரும் கூற்றுக்களுடன் தொடர்புடைய நபர்களைப் பெயரிடுக.
அ. முல்லேரியா யுத்தத்தில் வெற்றி பெற்ற இளவரசன்

ஆ. தோனா கதரினா என்ற பெயரில் ஞானஸ்தானம் பெற்ற மலையக இளவரசிஇ. இலங்கையின் இறுதிச் சிங்கள மன்னன்

ஈ. கி.பி 1815 இல் மலையக உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பிரித்தானிய ஆளுநர்.

3. கி.பி. 1840 மலையக சுதந்திரப் போராட்டத்திற்கு உதவிய காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

4. 2ம் இராசசிங்கன் போர்த்துக்கேயரின் அதிகாரங்களை முழுமையாக இந்நாட்டில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்த மன்னனாவான். இரண்டு காரணிகளின் உதவியுடன் இக்கூற்றை சுருக்கமாக விளக்குக

**தா**ய்லாந்தில் கிளியின் வடிவத்தில் பூக்கின்றது ஒரு வகைப்பூவினம். இது மிகவும் அரிய பூவினத்தைச்சேர்ந்தது. இதனால் இது அங்கு கிடைத்தற்கு அரிய பொருட்க ளில் ஒன் றாகப் பாதுகாக்கப்படுகின்றது. இப்பூவி னத்தை வெளிநாடுக ளுக்கு ஏற்றுமதி செய்கின்றமை தடைசெய்யப்பட்டுள்ளது.

# கிளி வடிவில் பூ



**கா**லத்திற்குக் காலம் வேற்றுக்கிரகங்கள்பற்றியும் அங்கு வசிப்பவர்கள்பற்றியும் கதைகள் வந்தவண்ணந்தான் உள்ளன. அப்படியான வேற்றுக்கிரகவாசிகள் உண்மையிலேயே வாழ்கின்றார்களா? சைபீரியாவைச் சேர்ந்த Irkutsk பிராந்தியத்திலுள்ள சிலர் தமது கைத்தொலைபேசிகளில் இந்தக் காட்சியினைப் பதிந்துள்ளனர். இதில் ஒரு வேற்றுக்கிரக விண்கலமும் 5 வேற்றுக்கிரகவாசிகள் பனிக்கூடாக நடந்துசெல்வதையும் பார்க்கக்கூடியவாறுள்ளது. ஓர் உருவம் விண்வெளிக் கலத்தின் எதிரேயும் ஏனைய 4 உருவங்களும் அக்கலத்திற்கு நேர் எதிராகவும் காணப்படுகின்றன. இவை காணப்படும் 2 நாட்களுக்கு முன்னர் அதிசய வெளிச்சங்கள் சைபீரிய வான் பகுதிகளில் காணப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.



இவை பதியப்பட்டு 2 நாட்களின் பின்னரும் பாரிய வெடிச் சத்தங்கள் கேட்டதாகவும் இதனால் இராணுவத்தினர் ஏதாவது பயிற்சிகளைச் செய்கின்றார்

# வேற்றுக்கிரக வாசிகளா?

களோவென மக்கள் விசாரித்த போது அவ்வாறு எதுவும் நடைபெறவில்லையென்றும் தெரியவந்தது. அத்துடன் இப்பதிவுகளைப் பதிந்தவர்கள் தாம் கண்டுபிடித்ததாகக் கூறிய வேற்றுக்கிரக வாசியின் சிதைந்த உடலமும் You Tube இல் ஏற்றப்பட்டிருந்தது. ஆனால், ரஷ்ய உள்துறை அமைச்சினால் இந்த உடல் பரிசோதிக்கப்பட்டபோது அது வெறும் பாண் துண்டுகளாலும் கோழித்தோலினாலும் மூடப்பட்டிருந்ததாக உறுதிப்படுத்தப் பட்டது. இவர்கள் இருவரும் ஏதாவது குற்றம் செய்துள்ளார்களா என்றும் அதிகாரிகள் விசாரணைசெய்து வருகின்றார்கள்

# பாடல் வரிகள் தோற்ற

**கூ**கிளின் யுடியூப் (Google youtube) பிரபலமான வீடியோ தளமாக இணையத்தில் இருக்கிறது. பெரும்பாலானோர் எந்த வகை வீடியோ அல்லது பாடல்கள் பார்ப்பது என்றாலும் யுடியூப் பக்கமே செல்வார்கள். இதில் வீடியோ சாங்ஸ் அதிக அளவில் பார்க்கப்படுகின்றன. உலகெங்கும் உள்ள வீடியோக்கள் இருப்பதால் உலகளவில் பிரபலமான மைக்கேல் ஜாக்சன், ஜெனிபர் லோபஸ், ‘கிரா போன்ற பாடகர்களின் பாடல்களைத் தேடி எடுத்து பார்த்து விடலாம். ஆனால் சிலருக்கு ஆங்கில வீடியோக்களைப் பார்க்கும் போது அதன் பாடல வரிகள் புரியாமலே இருக்கும். பாடல்வரிகள் வேண்டுமென்றால் மெனக்கெட்டு அதனை முன்னும் பின்னும் ஓடவிட்டு கேட்பார்கள். இல்லையெனில் இணையத்தில் குறிப்பிட்ட பாடலை வைத்து வரிகளைத் தேடுவார்கள்.

1. Lyrics for Firefox

யுடியூபில் பாடல்களை வீடியோவாகப் பார்க்கும் போதெ பக்கத்தில் பாடல் வரிகளும் தோன்றினால் நன்றாக இருக்கும் என நினைக்கலாம். இதற்கு உதவக்கூடியதாக பயர்பாக்ஸ் நீட்சி ஒன்று இருக்கிறது. இதன் பெயர் டுலசளைஉள. இது பாடலுக்கு ஏற்ற பாடல்வரிகளை இணையத்தில் தேடி எடுத்து அருகிலேயே காண்பித்து விடும். இதனால் நாம் பாடல்வரிகளைத் தேடும் வேலை மிச்சமாகிறது. ஆனால் தற்போது ஆங்கிலப் பாடல்களுக்கு மட்டுமே அதிமாக பாடல் வரிகள் வருகின்றன. சில தமிழ்ப் பாடல்களுக்கும் ஆங்கில வரிகள் கிடைக்கின்றன. இதை கீழே உள்ள சுட்டியில் கிளிக் செய்து நிறுவிய பின் ஒருமுறை பயர்பாக்சை ரீஸ்டார்ட் செய்து கொள்ளவும்.

https://addons.mozilla.org/en-US/firefox/addon/lyrics/

பின்னர் யுடியூபில் வீடியோ பார்க்கும்போது அதன் அருகிலேயே சைட்பாரில் Lyrics என்ற இடத்தில் பாடல்வரிகளைக் காண்பிக்கும்.

மின்னலே வசிகரா பாடல்- http://www.youtube.com/watch?v=e_TZaqqnyJg

2.Chrome – Music video lyrics for Youtube

நீங்கள் குரோம் உலவி பயன்படுத்தினால் அதற்கு தனியாக ஒரு நீட்சி இருக்கிறது. ஆனால் இது மேற்குறிப்பிட்ட பயர்பாக்ஸ் நீட்சி அளவுக்கு அதிகான வீடியோக்களுக்கு பாடல்வரிகளைக் காண்பிக்க வில்லை. இருந்தாலும் பயன்படுத்தலாம்.குரோம் உலவியில் இந்த சுட்டியைக் கிளிக் செய்து நீட்சியை Add to Chrome கொடுத்தால் நிறுவப்படும்.

Download Music video lyrics for youtube

பிறகு குரோம் உலவியில் யுடியூபில் எதேனும் வீடியோ பார்க்கும் போது அதற்குப் பொருத்தமான பாடல் வரிகள் இருந்தால் உலவியின் மேல்பகுதியில் அட்ரஸ்பாரில் இருக்கும் ஐகான் Lyrics என்று காட்டும். அதைக் கிளிக் செய்தால் பாடல் வரிகள் காட்டப்படும்.

கணினி மூலை

**நா**ம் அனைவரும் சாதாரணமாகச் சாப்பிடும் கரட்டைத் தான் பார்த்திருக்கின்றோம். ஆனால் இந்தக் கரட்டோ வேற்றுக் கிரக வாசிகளைப் போன்ற உருவத்தில் காணப்படுகின்றது.

அக்குபஞ்சர் நிபுணரான யுவோன் டாணெலின் வட்டுத்தோட்டத்தில் வளர்ந்த கரட்டுகள் ஒரு வேறறுக் கிரகத்தவரைப் போல வடிவம் பெற்றுளளது.


பிரித்தானியாவில் இதனைவிடவும முன்னர் ஒக்சோன் பகுதியிலுள்ள ஒரு தோட்டத்தில் 5 விரல்களைப் போன்ற வடிவங்களுடன் ஒரு கரட் காணப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இதனைவிடவும் இயந்திர மனிதனைப் போன்றும் ஒரு கரட் காணப்பட்டது.



# வேற்றுக்கிரகவாசி போல்

# இரட்டைத் திரைக் கணினி




**உ**லகின் முதலாவது 17 அங்குல எல்.ஈ.டி எச்.டி இரட்டைத் திரைகளுடன் கூடிய மடிக் கணினியை அலஸ்காவைச் சேர்ந்த ஜி ஸ்கிரீன் நிறுவனம் உருவாக்கியுள்ளது. ஸ்பேஸ்புக் என இம்மடிக்கணினி பெயரிடப் பட்டுள்ளது. இக் கணினியானது விண்டோஸ் 7 இயங்குதளத்தின் மூலம் இயங்கவுள்ளது. வருட இறுதியில் இது சந்தைக்கு வரவுள்ளது. இதை உருவாகியவர் ஜி ஸ்கிரீன் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று இயக்குனரும் வடிவமைப்பாளருமான அலன் ஸ்டுவெர்ட் ஆவார். மற்றைய மடி கணினிகளை விட, இதில் 50 % மேலதிக பணிகளை ஆற்ற முடியுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதன் ஆரம்ப விலை 1899 அமெரிக்க டொலர்கள் என அறிவிக்கப்படுகிறது. ஏசர் நிறுவனமும் இரட்டைத் திரைகளைக் கொண்ட மடிக் கணினிகளை அறிமுகப் படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது

**சொ**க்லேட் சாப்பிடுவதால் இதய நோய், பக்கவாதம் ஏற்படும் ஆபத்து 3ல் ஒரு பங்கு குறைவதாக 8 ஆய்வுகளின் இறுதிக்கட்ட அறிக்கை தெரிவிக்கிறது. தினசரி சிறிதளவு சொக்லேட் சாப்பிடுவதால் இதய நோய், பக்கவாதம் ஏற்படும் அபாயம் குறைவதாக கடந்த சில ஆண்டுகளாக நடந்த 7 ஆய்வு முடிவுகளில் தெரிவிக்கப் பட்டது. அவற்றை ஒருங்கிணைத்து 8வது ஆய்வை இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் நடத்தினர். அதில் இதய நோய் பாதித்த, பாதிக்காத சுமார் 1 இலட்சம் பேர் பங்கேற்றனர். ஒரு பிரிவினருக்கு சாக்லேட் அளிக்கப்படவில்லை. மற்றொரு பிரிவுக்கு அதிகளவில் சாக்லேட் அளிக்கப்பட்டு வந்தது. அவர்களிடம் நடத்தப்பட்ட முதல்கட்ட 6 ஆய்வுகளில் சாக்லேட்டுக்கும் இதயம் தொடர்பான பிரச்னைகளுக்கும் தொடர்பு இருப்பது நிரூபணமானது. தினசரி ஒன்று என்ற அளவில் சாக்லேட் பார் சாப்பிட்டு வந்தவர்களுக்கு மற்றவர்களைவிட இதய நோய் ஆபத்து 37 சதவீதம் குறைவாக இருந்தது சோதனையில் தெரிய வந்தது. 29 சதவீதம் பக்கவாத அபாயம் நீங்கியது. எனினும், மாரடைப்பை தடுப்பதில் சாக்லேட்டுக்கு பங்கில்லை என்று தெரிந்தது.



# இதயநோய் இல்லாமலிருக்க...

# 11 ஆண்டுகளாக தூக்கு நிறைவேற்றாதமைக்கு தி.மு.க தான் காரணம் என்கிறார் கருணாநிதி



(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் முருகன், சாந்தன், பேறிவாளனுக்கு 11 ஆண்டுகளாக தூக்குத் தண்டனை நிறைவேற்றப படாமல் இருப்பதற்குத் தி.மு.க தான் காரணம் என்று அக்கட்சித் தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஒரு குற்றவாளியான நளினிக்கு விதிக்கப்பட்ட தூக்குத தண்டனையை மட்டும் ஆயுள் தண்டனையாக குறைக்கலாம் என்றும் மற்ற மூவரின் கருணை மனுக்களை நிராகரிக்கலாம் என்றும் 2000ஆம் ஆண்டில் தி.மு.க ஆட்சியில்தான் முடிவெடுக்கப் பட்டது என்று முதல்வர் ஜெயலலிதா பேரவையில் குற்றஞ் சாட்டியிருந்தார்.

அதற்கு கருணாநிதி அளித்துள்ள பதிலில் நளினியின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்ததற்குத் தி.மு.க.தான் காரணம் என்பதை முதல்வர் ஜெயலலிதா தன்னை அறியாமலேயே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

மற்ற மூவரின் கருணை மனுக்களையும் 2000ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மத்திய அரசுக்குத் தமிழக அரசு அனுப்பி வைத்தது என்றும் சொல்லியிருக்கிறார்.

மத்திய அரசுக்கு அந்தக் கருணை மனுக்களை அனுப்பி வைத்ததன் காரணமாகத்தான் 11 ஆண்டுகளாக அவர்களது தூக்குத் தண்டனை நிறைவேற்றப் படவில்லை என்பதை இதன் மூலம் முதல்வர் ஜெயலலிதா வெளிப்படுத்தியிருக்கிறார்.

11 ஆண்டு காலமாக குடியரசுத் தலைவர் அலுவலகம் முடிவெடுக்காமல் இருந்ததால் அதையே ஒரு காரணமாக வழக்கறிஞர்கள் எடுத்துக் கூற, நீதிமன்றம் தூக்குத் தண்டனையை தற்போது ஒத்திவைத்திருக்கிறது என்று தனது அறிக்கையில் கருணாநிதி கூறியுள்ளார்.

# சமூக ஆர்வலர் அன்னாஹசாரேவுக்கு சொந்த ஊரில் உற்சாகவரவேற்பு



(புனே)

ஊழலுக்கு எதிராக வலிமையான மசோதா கோரி சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே 12 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார். அரசு அவரது கோரிக்கையை ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து 13வது நாளில் தனது போராட்டத்தை முடித்து கொண்டார். உடல் பலவீனம் அடைந்து இருந்த அவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு நேற்றுமுன்தினம் தனது சொந்த ஊருக்குப் புறப்பட்டார். மராட்டிய மாநிலம் புனே நகரில் அகமத்நகர் மாவட்டத்தில் அமைந்து உள்ள அவரது சொந்தக் கிராமத்தில் நள்ளிரவு 1.30 மணிவரை கிராம மக்கள் காத்து இருந்து அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## இந்தியச் செய்திகள்

# கர்ப்பம் என்பது நோயா? கேட்கிறார் ஐஸ்வர்யாராய்

(சென்னை)

கர்ப்பம் என்ன ஒரு நோயா? என்று கர்ப்பிணியான நடிகை ஐஸ்வர்யா ராய் கேள்வி எழுப்பியுள்ளார். சினிமா நடிகைகளின் வாழ்க்கையை சித்தரிக்கும் ஹீரோயின் என்ற படத்தில் ஒப்பந்தமான நடிகை ஐஸ்வர்யா ராய், கர்ப்பம் ஆனதையடுத்து அப்படத்தில் இருந்து நீக்கப்பட்டார்.

ஐஸ்வர்யா தான் கர்ப்பமாக இருப்பதை மறைத்து விட்டார் என்று ஹீரோயின் பட இயக்குனர் குற்றம் சாட்டினார். இதையடுத்து கோபமடைந்த ஐஸ்வர்யா ராய்,படத்திற்காக வாங்கிய அட்வான்ஸ் தொகையை திருப்பிக் கொடுத்து விட்டார்.

இந்நிலையில் அம்மணி தொடர்ந்து விளம்பர படங்களில் நடித்து வருகிறார். ஐஸ்வர்யா ராயின் இந்த நடவடிக்கை பாலிவுட் பட உலகினர் பலரை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. ஐஸ்வர்யா ராய் பணத்தாசை பிடித்தவர் என்ற விமர்சனங்களும் கிளம்பியுள்ளன.



இந்த விமர்சனங்களுக்கு பதில் அளித்திருக்கும் ஐஸ்வர்யா ராய், கர்ப்பம் என்பது நோய் அல்ல. சினிமாவில் நடிக்க உடல் ஆரோக்கியமாக இருந்தால் போதும். நான் ஆரோக்கியமாக இருப்பதால் விளம்பர படங்களில் நடிக்கிறேன், என்று கூறியுள்ளார்.

# முருகன், சாந்தன், பேரறிவாளனின் கண்காணிப்பு விதி தளர்த்தப்பட்டது



முருகன் சாந்தன் பேரறிவாளன்

(வேலூர்)

வேலூர் சிறையில் உள்ள முருகன்,சாந்தன்,பேரறிவாளனின் கண்காணிப்பு விதிகள் நேற்று முன்தினம் காலை முதல் தளர்த்தப்பட்டுள்ளன.

சிறை விதிகளின்படி, தூக்குத் தண்டனைக் கைதிகள் தனி அறையில் அடைக்கப்பட்டனர். சிறை வளாகத்தில் அவர்கள் சுதந்திரமாக நடமாட தடை விதிக்கப்பட்டது. 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டனர். சிறப்பு உணவுகள் வழங்கப்பட்டன. இதற்கிடையில் கருணை மனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் சார்பில் கடந்த திங்கட்கிழமை மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை நீதிபதிகள் நாகப்பன்,சத்யநாராயணன் ஆகியோர் கொண்ட பெஞ்ச் நேற்று முன்தினம் விசாரித்தது. அப்போது, ராஜீவ் கொலையாளிகளின் தூக்குத் தண்டனையை 8வார காலத்துக்கு நிறுத்திவைக்க வேண்டும் என நீதிபதிகள் இடைக்காலத் தடை விதித்தனர். இதற்கான உத்தரவு வேலூர் சிறை கண்காணிப்பாளருக்கு பக்ஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில்,ராஜீவ் கொலையாளிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகள், கண்காணிப்புகள் நேற்றுக் காலை முதல் விலக்கிக் கொள்ளப்பட்டது அவர்கள் ஏணைய தண்டனைக கைதிகளைப் போல நடத்தப்பட்டனர். ராஜீவ் கொலையாளிகளை இனி செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் மட்டுமே உறவினர்கள் சந்திக்க அனுமதிக்கப்படுவர். என்று சிறைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.



தமிழக புதிய ஆளுனராக பொறுப்பேற்றுள்ள ரோசய்யாவை தமிழக முதல்வர் ஜெயலலிதா,விமான நிலையத்தில் மலர்க் கொத்து கொடுத்து வரவேற்றார்.

# கிறிஸ்தவராக உள்ள நடிகர் விஜய் இந்துக் கடவுள்களை அவமதிப்பதா?

## கொதிக்கிறது இந்து மக்கள் கட்சி




(சென்னை)

நடிகர் விஜயின் மக்கள் இயக்கத்தின் சார்பில் ஏழை, எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் வேலாயுதம் பட ஓடியோ கசட் வெளியீட்டு விழா மதுரையில் நடந்தது. இந்த விழாவையொட்டி ரசிகர்கள் விஜயை சிவன்,முருகன் போலவரைந்து பதாகைகளைக் கட்டியிருந்தனர்.

இதற்குக் கண்டனம் தெரிவித்து இந்து மக்கள் கட்சியைச் சேர்ந்த கண்ணன் கூறியதாவது,

இவர் திட்டமிட்டே கோடிக் கணக்கான இந்துக்களின் மனதை புண்படுத்தியுள்ளார். கிறிஸ்தவ மதத்தைச் சேர்நதவரான நடிகர் விஜய்,எப்படி இந்துக் கடவுள்களான சிவனையும்,முருகனையும் படைக்க முடியும்? தமிழகத்தின் அன்னா ஹசாரே என்று தன்னைத் தானே வர்ணித்து பனர்களை வைக்கச் சொல்லும் விஜய், தனக்கு சம்பளம் எவ்வளவு என்பதை வெளிப்படையாகச் சொல்வரா? அந்த சம்பளத்திற்கு கட்டிய வருமான வரிக் கணக்கை காட்டுவாரா? அவருடைய கல்யாண மண்டபம் உள்ளிட்டவற்றிற்காக கட்டப்பட்டுள்ள வணிக வரிக் கணக்கைக் காட்டுவாரா? வேலாயுதம் படத்தை எப்படியாவது ஓட வைக்க வேண்டும் என்பதற்காக விஜய்யும், அவருடைய தந்தை எஸ்.ஏ.சந்திரசேகரும் இந்து மதத்தை புண்படுத்தும் இதுபோன்ற செயல்களைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்கள்.

உடனடியாக இந்தப் பனர்களை திருப்ப பெற்றுக் கொண்டு மன்னிப்புக் கேட்காவிட்டால், எங்கள் கட்சி போராட்ட களத்தில் இறங்கும் என்று இந்து மக்கள் கட்சி கண்ணன் தெரிவித்துள்ளார்.

# திருமணத்தை இரகசியமான முறையில் நடத்த வேண்டிய தேவை இல்லையாம்

## கூறுகின்றனர் பிரபுதேவா,நயன்தரா


(சென்னை)

எங்களது திருமணத்தை ரகசியமாக நடத்த வேண்டிய அவசியமில்லை, வெகு விமரிசையாகத்தான் நடத்துவோம் என்று பிரபுதேவாவும், நயன்தாராவும் கூறியுள்ளனர். பிரபுதேவாவுக்கும், நயன்தாராவுக்கும் இரு தினங்களுக்கு முன்னர் மும்பையில் ரகசியமாக திருமணம் நடந்ததாக நேற்று செய்திகள் வெளிவந்தது.

ஆனால் இதனை இருவரும் மறுத்துள்ளனர். இதுகுறித்து பிரபுதேவாவும், நயன்தாராவும் அளித்துள்ள பேட்டியில், எங்களது திருமணத்தை ரகிசயமாக நடத்த வேண்டிய அவசியமில்லை. முறைப்படி எல்லோரது முன்னிலையிலும் வெகு விமரிசையாகத்தான் நடக்கும்.

இம்மாதம் செப்ரெம்பரில் நடத்தத் திட்டமிட்டு இருக்கிறோம். மும்பை அல்லது ஐதராபாத்தில் நடத்த எண்ணியுள்ளோம்.

எந்த இடம் என்று இறுதி முடிவு எடுத்த பின்னர் இது குறித்து அறிவிப்பை விரைவில் வெளியிடுவோம் என்று கூறியுள்ளனர்



# சிம்பாப்வேயில் உள்ளாரா கடாபி? இங்கிலாந்து நாளிதழின் சந்தேகம்



உலகச் செய்திகள்

(ஹராரே)

பதவியிறக்கப்பட்ட லிபிய அதிபர் கடாபி சிம்பாப்வேயில் ஒளிந்திருக்கக்கூடும் என்று இங்கிலாந்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது குறித்து இங்கிலாந்தைச் சேர்ந்த நாளிதழான டெய்லி மெயிலில் வெளியிடப்பட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது,

கடாபி சிம்பாப்வே அதிபர் ரொபேர்ட் முகாபேக்கு சொந்தமான ஜெட் விமானத்தில் கடந்த வாரம் சிம்பாப்வேயில் வந்து இறங்கினார். ஆனால் முகாபேயின் செய்தித் தொடர்பாளர் ஜோர்ஜ் சரம்பா இதை மறுத்துள்ளார். கடாபியைப் பார்த்தால், என் சார்பில் நலம் விசாரியுங்கள் என்று அவர் கூறினார்.

ஒரு வேளை கடாபி சிம்பாப்வேயில் தஞ்சம் புக அனுமதி கேட்டால் கொடுக்கப்படுமா என்பதற்கு சரம்பா பதில் அளிக்கவில்லை. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், கடாபி சிம்பாப்வேயில் தான் பதுங்கி இருக்க வேண்டும் என்று ஏராளமானோர் கருதுகின்றனர். அவர் கடந்த புதன்கிழமையே ஹராரே வந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. கடந்த புதன்கிழமை ஹராரேவில் மின்வெட்டு ஏற்பட்டது. அது கடாபி வருவதை யாரும் தெரிந்து கொள்ளாமல் இருப்பதற்காகத் தான் என்று சிலர் கருதுகின்றனர்.

முகாபேயின் அரசியல் எதிரிகள் கடாபி சிம்பாப்வேயில் வந்திறங்கியதைப் பார்த்ததாக டெய்லி மெயில் செய்தி வெளியிட்டுள்ளது. கடாபியுடன் அவரது மகன் சைப் அல் இஸ்லாமும் தப்பித்திருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது

# லிபிய புரட்சிப்படையிடம் சரணடைவதற்குத் தயார்

## - கடாபியின் மகன் ஸாதி அறிவிப்பு

(திரிபோலி)

கடாபியின் மகன்களில் ஒருவரான ஸாதி, கிளர்ச்சியாளர்களிடம் சரணடையத் தயாராக உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி, புரட்சிப் படையின் தளபதி அப்துல் ஹக்கிம் பெல்ஹாச் கூறியதாவது:-

கடாபியின் மகன் அல்-ஸாதி கடந்த செவ்வாய்க்கிழமை முதன் முறையாக என்னைத் தொடர்பு கொண்டு தொலைபேசியில் பேசினார். தான் சரண் அடைய விரும்புவதாகவும், தனது உயிருக்கு உத்தரவாதம் அளிக்க முடியுமா? என்றும் கேட்டார்.

உங்கள் உயிரைப் பற்றி நீங்கள் அச்சப்படத் தேவையில்லை. உங்களது உயிருக்கும், உரிமைக்கும் நாங்கள் உத்தரவாதம் அளிக்கிறோம். மேலும், நீங்கள் மனிதாபிமானத்துடன் நடத்தப்படுவீர்கள் என்று அவரிடம் கூறினேன். ஸாதி சரண் அடைந்த பிறகு, சட்டத் துறையின் பாதுகாப்பையும் கோர திட்டமிட்டு உள்ளார். நான் ஒருவரையும் கொல்லவில்லை. மக்களுக்கு விரோதமாக ஒருபோதும் செயற்பட்டது கிடையாது என்றும் ஸாதி தெரிவித்தார்.




அதற்கு நீங்கள் சரண் அடைய எடுத்த முடிவு சிறப்பானது. லிபிய மண்ணில் மேலும் ரத்தக் கறை படிவதை எங்களில் யாரும் விரும்பவில்லை. நீங்கள் மட்டுமன்றி உங்களுடன் சேர்ந்தவர்களும் சரணடைவது தான் நல்லது என்று அவரிடம் விளக்கி கூறினேன் என அப்துல்ஹக்கிம் பெல்ஹாச் தெரிவித்துள்ளார். ஸாதி எங்கு மறைந்து வாழ்கிறார் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால், அதுபற்றி விளக்கமாக கூற முடியாது என்று அவர் தெரிவித்தார்.

# சைபர் தாக்குதலுக்கு இலக்காகிய விக்கிலீக்ஸ் இணையத்தளம்

(லண்டன்)

சர்ச்சைக்குரிய விக்கிலீக்ஸ் இணையத்தளம் சைபர் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆயிரக்கணக்கான அமெரிக்கத் தூதரகங்களின் இகரசிய ஆவணங்களை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுத்துள்ள நிலையில் இந்தத தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் கூறியுள்ளது.




அவுஸ்ரேலியாவினை பிறப்பிடமாக கொண்ட ஜூலியன் அசான் ஞேயினால் விக்கிலீக்ஸ் இணையத்தளம் இயக் கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.அமெரிக்கத் தூதரங்களின் பல ஆயிரக்கணக்கான இரகசிய ஆவணங்களை கடந்த ஆண்டு முதல் வெளியிட்டு வரும் விக்கிலீக்ஸ் பல்வேறு சர்ச்சைகளை தோற்றுவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# ஆங்கில கால்வாயை நீந்திக் கடந்து முதியவர் கின்னஸ் சாதனை

(லண்டன்)

ஆங்கிலக் கால்வாயை 18 மணி நேரத்தில் நீந்தி கின்னஸ் சாதனை படைத்தார் 70 வயது முதியவர். இதன் மூலம் ஆங்கில கால்வாயை நீந்திக் கடந்த இரண்டாவது முதியவர் என்ற பெருமையினை பெற்றுள்ளார். உலகின் கடல் வழி வர்த்தகத்திற்காக மிகவும் பிசியான கால்வாய் ஆங்கிலக் கால்வாய் அட்லாண்டிக் கடல்பகுதியின் வடக்கே அமைந்துள்ளது.இங்கிலாந்தின் தெற்கு பகுதி, பிரான்சின் வடக்குப் பகுதியினை இணைக்கிறது. இந்நிலையில் இங்கிலாந்தின் அரண்மனையில் நீண்ட வருடங்களாக விசுவாசியாகப் பணியாற்றி வரும் ரோஜர்ஆல்சோப் (70) என்பவர் ஆங்கிலக் கால்வாயினை 18 மணிநேரத்திற்குள் நீந்தி சாதனை படைத்தார். முன்னதாக கென்ட் மாகாணத்தில் டோவர் நகரில் உள்ள ஷேக்ஸ்பியர் கடற்கரைப் பகுதியிலிருந்து நேற்றுமுன்தினம் தனது நீச்சல் பயணத்தை தொடக்கினார். மொத்தம் 21 கடல் மைல்கள் நீந்தி 17 மணிநேரம் 51 நிமிடங்களில் பிரான்ஸ் நாட்டு கடல்எல்லையினை அடைந்து இவர் சாதனை படைத்ததாக டெய்லிமெயில் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இது ஒரு கின்னஸ் சாதனை எனவும் அந்தப் பத்தரிகையில் குறிப்பிடப்பட்டுளளது.

முன்னதாக அமெரிக்க விமானப்படையில் கப்டனாக பணியாற்றி ஓய்வு பெற்ற ஜியார்ஜ் புருன்ஸ்டட் 70 என்பவர், கடந்த 2004-ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம், ஆங்கிலக் கால்வாயினை 15 மணி நேரம் 59 நிமிடங்களில் 21 கடல்மைல்கள் வரை நீந்தி சாதனை படைத்தார். இந்தச் சாதனையை தற்போது ரோஜர்ஆல்சோப்பால் முறியடிக்க இயலவில்லை. எனினும் ஆங்கிலக் கால்வாயை நீந்தி கடந்த இரண்டாவது முதியவர் என்ற பெருமையினைப் பெற்றார்

# பதிவிறக்கப் பெட்டகம்

கைக்கு அடக்கமான ஒரு சின்ன சிட்டுக்குருவி தரையிலிருந்து விர்ரென எழுந்து கண்ணைமூடி கண்ணைத் திறப்பதற்குள் வானத்தை நோக்கிப் பறந்து வட்டமடித்துவிட்டு, லாவகமாக ஒரு மரக்கிளையிலோ அல்லது ஒரு மதிலின்மீதோ இறங்கி அமர்வதைப் பார்த்து வியப்பில் ஆழ்ந்து போகாத மனமே இருக்கமுடியாது. அதன் பறத்தல், அதன் சுதந்திரம் நம்மை ஒவ்வொரு கணமும் ஈர்த்தபடி இருக்கிறது. பறவை பற்றிய வரிகள் அவை எப்படிப்பட்டதாக இருந்தாலும் நம் நெஞ்சில் சட்டென இடம்பிடித்துவிடுகின்றன. ‘அதோ அந்தப் பறவை போல வாழவேண்டும்’ என்கிற திரைப்படப்பாட்டாக இருந்தாலும் சரி, ‘நாராய் நாராய் செங்கால் நாராய்’ என்கிற சத்திமுற்றப் புலவரின் வரியாக இருந்தாலும் சரி, ‘என்பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கென்று ஒருவாய்ச்சொல் என்பிழைக்கும் இளங்கிளியே, யான்வளர்த்த நீயிலையே?’ என்று கிளியைத் திருமாலிடம் தூது அனுப்பும் திருவாய்மொழிப்பாட்டானாலும் சரி, எதையும் ஒருபோதும் மறக்கமுடியாது;

**- பாவண்ணன்**

புறாக்களின் சிறப்பம்சமே நீண்ட தொலைவு குறி தவறாமல் பறப்பது. அந்த அடிப்படையிலேயே அவை தகவல்களைச் சேகரிக்கவும், கொண்டு சேர்க்கவும் மன்னர் காலங்களில் பயன்படுத்தப்பட்டன. உலகப் போர்க் காலங்களில் அவைகளின் பங்கு அளப்பரியதாக இருந்தது. முதலாம் உலகப் போர் நடைபெற்றபோது பிரான்ஸ் படையினரை, தன் காலிலும் இறக்கையிலும் அடிபட்ட போதிலும், தகுந்த முன்னெச்சரிக்கைத் தகவலைக் கொணர்ந்து சேர்த்துக் காப்பாற்றியது ஷெர் அமி என்ற புறா. போருக்குப்பின் விருதுகளை வழங்கிக் கௌரவித்தது அந்நாட்டரசு. ஹிட்லர் காலத்தில் வெடி மருந்துகளைச் சுமந்து செல்லும் ஏவுகணைகளாக இப்பறவை பயன்படுத்தப்பட்டது. இந்தகாலங்களில்தான் இவை பெருமளவு கொல்லப்பட்டன. ஜெர்மன் நாட்டின் புறநகர்ப்பகுதிகளில் சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டவை இறந்து குவியல் குவியலாகக் காணப்பட்டன.



கடந்த ஜனவரியிலும் இம்மாதிரியான அதிர்ச்சி தரும் சம்பவம் நடந்தது. வடக்கு இத்தாலியில் உள்ள பாயன் ஷா நகரில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட புறாக்கள் வானிலிருந்து இறந்து விழுந்தன. இவை மட்டுமன்றி, அமெரிக்காவின் ஆர்கன் சாஸ், டெக்ஸாஸ் மற்றும் சுவீடன், நியூசிலாந்து ஆகிய நாடுகளில் வானில் இருந்து இறந்த நிலையில் பறவைகள் கீழே விழுந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தின. இறந்தவைகளின் உடலை ஆய்வுக்கு உட்படுத்தியபோது, பாயன் ஷா நகரில் அமையப் பெற்ற தொழிற்சாலைப் புகையால் வானில் ஒட்சிசன் குறைவு ஏற்பட்டு, மூச்சுத் திணறலும், அதனால் உடல் முழுவதும் விஷமாகி இருப்பதும் தெரியவந்தது. இன்றளவும் இவ்வாறு நடைபெறுவதும், அதை இத்தாலிய அரசு கண்டு கொள்ளாமல் இருப்பதும், உலக அரங்கில் இச்செய்தி முக்கியத்துவம் பெறாமல் இருப்பதும் வருந்தத் தக்கது.

17-19 ம்நூற்றாண்டு இறுதி வரை இவை அடிமைகளின் உணவாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இங்கிலாந்து ராஜ வம்சத்தினர் பொழுது போக்கிற்காக இவைகளை சுடும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர். வீழ்த்தப்பட்ட புறாக்கள் தங்கள் நாய்களுக்கும், கொட்டடியில் மாடுகளைக் கவனிக்கும் கறுப்பர்களுக்கும் உணவாக வழங்கப்பட்டன. காலத்தின் ஓட்டத்தில், மக்களால் எழுப்பப்பட்ட கொல்வதற்கு எதிரான குரல் வலுப்பெற, ராஜ குடும்பத்தினர் சுட்டுக் கொல்வதைக் கைவிட்டனர். பின்னர் அக்குடும்பத்தினரே புறாக்களை இரு கைகளிலும் பிடித்துப் பறக்கவிட்டு, தாங்கள் சுடும் கொள்கையை கைவிட்டு விட்டதாகவும், இனி யாரும் இப்படியான பழக்கத்தை தொடரலாகாது என்ற சட்டமும் பிறப்பித்தன்ர். ஆங்கிலேய ஆட்சி உலகெங்கும் கோலோச்சிய நேரத்தில், தற்போதைய ராணிப் புறாக்களை அள்ளி வானில் பறக்க விட்டு அவ்வாறான் செயல் சமாதானம் ...அன்பு... ஆகியவற்றின் குறியீடாக அறிவித்தனர். அதுவே உலகெங்கிலும் நிலைத்த சம்பிரதாயமாகிப் போனது.

**- எஸ். கிருஷ்ணன் ரஞ்சனா**

ஒரு ஜென் துறவி பிரசங்கம் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார். அந்த நேரத்தில் அவரின் உரையை கெடுப்பது போன்ற சப்தத்தை ஒரு குருவி மரத்தின் மேலிருந்து கத்துகிறது. குரு மேலிருந்து வரும் சப்தத்தைக் கேட்டவுடன் தன் பிரசங்கத்தை நிறுத்திவிட்டு குயில் கூவுவதை கேட்கிறார். சிறிது நேரத்தில் குயிலின் சப்தம் கேட்காமலேயே போகிறது. அனைவரும் குரு பிரசங்கத்தை ஆரம்பிக்கப் போகிறார் என்ற எதிர்பார்ப்பில் அவரின் முகத்தையே பார்த்துக்கொண்டிருக்கின்றனர். குரு பிரசங்கம் முடிந்துவிட்டது, குயிலின் சப்தம்தான் பிரசங்கம் என்று கூறி நகர்கிறார்.

நமக்கு இவ்வளவு அழகான இயற்கையை ரசிக்கும் மனப்பான்மை இன்னும் கற்றுக்கொடுக்கப்படவில்லையா?


மண்ணித்தலை புனித செபஸ்தியார் ஆலய வருடாந்தப் பெருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தில் கிளி.முல்லை மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு. யாவிஸ், பாசையூர் பங்குத்தந்தை றோய் பேடினன், பூநகரி பங்குத்தந்தை ஆகியோர் இணைந்து திருநாள் திருப்பலி நிறைவேற்றுவதையும், புனிதரின் திருச்சொரூபம் புதிய தேரில் பவனியாக வருவதையும், கலந்துகொண்ட மக்களையும் காணலாம்.

# தமிழ் நாட்டிலுள்ள இலங்கை அகதிகளை பாதுகாப்பான முறையில் அழைத்துவர ஏற்பாடு

(கொழும்பு)

வடபகுதியில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் கடைசிக் கட்டத்தை அடைந்திருக்கும் இவ்வேளையில் மீள்குடியேற்ற அமைச்சு தமிழ்நாட்டில் உள்ள சுமார் 31 முகாம்களில் வாழ்ந்துவரும் இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து சென்ற பல்லாயிரக்கணக்கான மக்களை மீண்டும் பாதுகாப்பாக நாட்டுக்கு அழைத்து வந்து மீள்குடியேற்றுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் உத்பல பஸ்நாயக்க புதுடில்லியிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடாக தமிழ் நாட்டு முகாம்களில் வாழ்ந்துவரும் இலங்கைத் தமிழர்களை மீண்டும் இங்கு அழைத்து வருவதற்கான ஒழுங்குகளைச் செய்து வருவதாகக் கூறினார்.

இந்த மக்கள் இலங்கை திரும்புவதற்குத் தேவையான ஆவணங்களை அவர்களுக்கு தயார்படுத்திக்கொடுத்து அவர்களை மீண்டும் நாடு திரும்புவதற்கான வசதிகளை துரிதப்படுத்துமாறு அரசாங்கம் சென்னையிலுள்ள இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகராலயத்துக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. இவர்களுக்கு உடனடியாக இலங்கை திரும்புவதற்கான கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொடுப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## வன்னியின் பல பகுதிகளிலும் குடி நீருக்குத் தட்டுப்பாடு

(கிளிநொச்சி)

வன்னியின் பல பகுதிகளிலும் கடும் வரட்சி நிலவி வருவதால் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

கோடைகால வரட்சியின் காரண மாக கிணறுகளில் நீர் வற்றியுள்ளது. இதனால், நீருள்ள ஆழமான கிணறுகளை நோக்கி மக்கள் தொலைதூரம் செல்ல வேண்டியுள்ளது. அத்துடன், பவுசர் மூலமான குடிநீர் விநியோகத்திலும் குறைபாடுகள் நிலவுகின்றன.

தட்டுவன்கொட்டி, தருமபுரம், பூநகரி, வெள்ளாங்குளம், வலைப்பாடு, முழங்காவில், முட்கொம்பன், அக்கராயன், ஆனைவிழுந்தான் ஆகிய பகுதிகளிலுள்ள மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சில பகுதிகளில் மக்களுக்கான குடிநீர் விநியோகத்தை பிரதேச செயலகங்களும் படையினரும் மேற்கொண்டு வருகின்றனர். எனினும், மக்களுக்கான குடிநீர்ப் பிரச்சினை முழுமையாகத் தீர்க்கப்படவில்லை.

## பச்சிலைப்பள்ளியில் 400 நிரந்தர வீடுகள்

(பளை)

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர் பிரிவில் மேலும் 400 புதிய வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளை மீளப்புனரமைப்புச் செய்யும் பணியாக முற்றாக அழிவடைந்த 400 வீடுகளை நிர்மாணிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்திய உதவி வீடமைப்புத்திட்டம், சுவிஸ் அபிவிருத்தி அமைப்பு போன்றவற்றின் உதவியுடன் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன. இந்த அமைப்புகளின் உதவித்திட்டத்தின் கீழ் தம்பகாமம், இயக்கச்சி, பளை உள்ளிட்ட பகுதிகளில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன. சில வீடுகள் பூர்த்தியடையும் நிலையிலுள்ளன.

## துணுக்காய் பகுதியில் அமைக்கப்பட்ட கணினி பயிற்சிக்கூடம் திறப்பு

(துணுக்காய்)

துணுக்காய் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட அறிவகத்தின் கணினிப் பயிற்சிக்கூடம் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ சந்திரசிறி ஆகியோரால் கடந்த 27 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இந்த நிலையத்தில் மாணவர்களுக்கு கணினித்துறை மற்றும் அதனோடிணைந்த துறைசார் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. இப்பயிற்சி நிலையத்தின் முதலாவது தொகுதிக்கு மல்லாவி மத்திய கல்லூரி, யோகபுரம் மகாவித்தியாலயம் மற்றும் பாலிநகர் மகாவித்தியாலயம் ஆகியவற்றிலிருந்து 15 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு



இலவசமாக பயிற்சியினை பெறும் பொருட்டு அனுமதியும் வழங்கப்பட்டது.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் அ.பத்திநாதன், துணுக்காய் பிரதேச சபை செயலாளர், கிருஷ்ண நவரட்ணராஜா, துணுக்காய் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் மற்றும் பொது மக்களும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்

## மர்ம மனிதன் நடமாட்டம் உடுவில் பகுதியில் அச்சம்

(சுன்னாகம்)

சுன்னாகம் நாகம்மாள் கோவில் பகுதியில் கடந்த புதன்கிழமை இரவு மர்ம மனிதன் உலாவியதாக மக்கள் கலவரம் அடைந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. மேற்படி பகுதியில் இரவு பத்து மணியளவில் மூன்று மர்ம மனிதர்களை மக்கள் கண்டதாகவும் அவர்களைக் கண்டு துரத்திச் சென்றதாகவும் மக்கள் உசார் அடைந்ததன் காரணத்தால் மர்ம மனிதர்கள் தப்பி ஓடிவிட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் கலவரமடைந்த மக்கள் இரவு முழுவதும் தூக்கமின்றி கழித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (17)

# பூந்தோட்டம் நலன்புரி முகாமிற்கு இனந்தெரியாதோர் தீ வைப்பு

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி முகாமின் ஒருபகுதிக்கு இனந்தெரியாத நபர்களால் நேற்றுமுன்தினமிரவு தீ வைக்கப்பட்டுள்ளது. குறித்த முகாமிற்குள் நுழைந்த இனந்தெரியாத குழுவினர் முகாமின் ஒரு பகுதிக்கு தீ வைத்து விட்டு சென்றுள்ளனர். இதனைத் தொடர்ந்து முகாம் மக்களால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அத்துடன் முகாம் பகுதியில் மின் சாரம், நீர்விநியோகம் என்பன துண்டிக்கப்பட் டுள்ளன. மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதனால் இரவு வேளைகளில் மக்கள் நடமாட அஞ்சுகின் றனர். இந்நிலையில் மின் இணைப்பினைப் பெற்றுத்தருமாறு அதிகாரிகள் பலருக்கு முகாம் மக்கள் முறைப்பாடு செய்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென்று விசனம் தெரிவித்துள்ளனர். இதே வேளை இவர்களை கிளிநொச்சியில் மீள்குடியமருமாறு அதிகாரிகள் பணித்தபோது கிளிநொச்சியில் மீள்குடியேற மறுப்புத் தெரிவித்த இம்மக்கள், தமக்கு வவுனியாவில், காணிகளும் வீடுகளும் வழங்கப்பட வேண்டும் என கோரி வந்தனர். இதனையடுத்து பூந்தோடடம் அகதி முகாமில் உள்ள மக்களை கிளிநொச்சிக்கு அனுப்பி வைப்பதற்காக தாம் மின்சாரம் மற்றும் நீர் விநியோகத்தை துண்டித்ததாக அதிகாரிகள் முன்னர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## மாவிட்டபுரம் நந்தீஸ்வரர் ஆலய சுற்றுப்புற பகுதிகளில் சிரமதானம்



(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் தெற்கில் அமைந்துள்ள நந்தீஸ்வரர் ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிரமதானப் பணிகள் இடம்பெற்றது.

வலி வடக்கில் மீளக்குடியமர்த்தப்பட்ட மாவிட்டபுரம் தெற்கு மக்களால் நந்தீஸ்வரர் ஆலயமும் அதன் சுற்றுப்புறமும் சிரமதானப பணிக்கு உட்படுத்தப்பட்டு சுத்தம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஆலயம் அதன் கட்டடங்கள் சிதைவடைந்து வருகையில் ஆலயத்தை புனர் நிர்மாணம் செய்யும் முயற்சிகளும் அதற்கான நிதிஉதவிகளை பெறும் முயற்சிகளும் ஆலய நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (17)

## உயர்தரப் பரீட்சைக்கான மதிப்பீட்டுப் பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தரப்பரீட்சை மதிப்பீட்டுப் பணி எதிர்வரும் ஆறாம்திகதி ஆரம்பமாகவுள்ளது.

அண்மையில் நடைபெற்று முடிந்த உயர்தரப் பரீட்சை 2011 இற்கான விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

இவ் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபட இருக்கும் ஆசிரியர்களுக்கான விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கான அனுமதிக்கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மேற்படி விடைத்தாள்மதிப்பிடும் பணிகள் யா.வேம்படி உயர்தர பெண்கள் கல்லூரியிலும் யா/மத்திய கல்லூரியிலும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையிலும் சிறந்த நிறுவனங்கள்

(கொழும்பு)

ஆசிய - பசுபிக் ஒத்துழைப்பு நாடுகளில் சிறந்த 200 நிறுவனங்களில், இலங்கையைச் சேர்ந்த 4 நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன. போர்பஸ்-ஆசிய பத்திரிகை வெளியிட்டுள்ள கணிப்பு அறிக்கையிலேயே இவ்வாறு நான்கு நிறுவனங்களும் இடம்பிடித்துள்ளன. இந்த அறிக்கையிலே 35 நிறுவனங்களுடன் இந்தியா இரண்டாம் இடம்பிடித்துள்ளதுடன், முதலிடத்தை சீனா பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இடம்பிடித்த இலங்கை நிறுவனங்கள் -

ஏசியன் அலைன்ஸ் இன்சுரன்ஸ் (Asian Alliance Insurance), பைரஹா பார்ம்ஸ் (Bairaha Farms), சிலோன் இன்வெஸ்ட் மென்ஸ் (Ceylon Investment), ரேனுகா ஹோல்டிங்ஸ் (Renuka Holdings)

## பாம்பு தீண்டி பெண் மரணம்


(யாழ்ப்பாணம்)

உடுவில்-சங்குவேலியைச் சேர்ந்த பெண் ஒருவர் பாம்புக் கடிக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 7.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர் கனகலிங்கம் செல்லம்மா (வயது-73) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (எப்.எஸ்)

# குடாநாட்டை மிரட்டுகிறது டெங்கு நோய் அபாயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இவ் வருடம் ஜனவரியின் பின்னர் குறைவடைந்திருந்த டெங்கு நோயின் தாக்கம் கடந்த மாதம் சடுதியாக அதிகரித்திருப்பதாகவும், இந்நோயின் தாக்கம் மேலும் அதிகரித்திருப்பதனைக் கட்டுப்படுத்த அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்புத் தேவை என யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாக ஏற்படும் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தும் வழிவகைள் குறித்த பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டு அவர் இவ்வேண்டுகோளை விடுத்தார்.

யாழ்பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற இச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சுகாதாரப் பகுதியினர் தனித்து எந்தவொரு நோயின் தாக்கத்தையும் கட்டுப்படுத்திவிட முடியாது. அது எமது சமூகக் கட்டமைப்பில் உள்ள அனைத்துத் தரப்பினரதும் பங்களிப்புடனேயே மேற்கொள்வது வெற்றியளிக்கும் என்றும் தெரிவித்தார்.

இதற்கு யாழ்.அரச அதிபர் தலைமையிலும், யாழ்.மாநகர சுகாதாரப் பகுதியினருடன் இணைந்தும் பல்வேறு தடுப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்தார். அத்துடன், பாடசாலை மட்டத்திலும், கிராம மட்டத்திலும், பிரதேசசபை மட்டத்திலும் இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினார்.

டெங்கு நோய்க் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது என்று சந்தேகம் கொள்ளும் ஒருவரை உடனடியாக தகுந்த சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டும். அவரைப் பூரணமாக ஓய்வாக இருக்கச் செய்ய வேண்டும். எந்தவித வேலையையும் அவர் செய்தலாகாது. இவ்வாறான விடயம் குறித்து பெருமளவு மக்களுக்கு விளக்கமின்மை காணப்படுகின்றது. எக்காரணம் கொண்டும் டெங்கு நோயாளி காய்ச்சலால் பீடிக்கப்பட்டவிடத்து பரசிட்டமோல் மாத்திரையைத் தவிர அஸ்பிறீன் மாத்திரை போன்றவற்றை பாவிக்கக்கூடாது எனவும், போதியளவு நீராகாரம் அருந்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இக்காலப்பகுதியில் கொழும்பிலும் டெங்குநோய் தீவிரம் பெற்றுள்ளது. அங்கு சென்று யாழ்ப்பாணம் திரும்பியவர்கள் மூலமாகவும், சுற்றுலாப் பயணிகளின் வருகையின் காரணமாகவே இந்நோய் இங்கு அதிகரித்திருப்பதாகவும், தமது ஆய்வுகள் உறுதிப்படுத்தியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டிருப்பவர்கள் இரத்தப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டியதும் அவசியமாகும். இந்நோயின் தாக்கத்துக்கு உள்ளானவர்கள் சிசிக்சை பெற்று வரும் வைத்தியசாலைகளில் ஏனையவர்களுக்கும் நோய் தொற்று ஏற்படுவதனைத் தடுக்கும் முகமாக யாழ்.போதனா வைத்தியசாலை உட்பட மேலும் சில வைத்திய சாலைகளுக்கு புகையூட்டும் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த அவர், கொழும்பு சென்று திரும்புபவர்கள் அவதானமாக இருக்கும்படியும், சிறுவர்களைத் தங்களுடன் அழைத்துச் செல்ல வேண்டாம் எனவும் தெரிவித்தார்.

கடந்த மாதம் 19 பேர் டெங்கு நோயாளிகளாக இனங்காணப்பட்டதாகவும், இருமரணங்கள் நிகழ்ந்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இப்பத்திரிகையாளர் சந்திப்பில் பிராந்திய தொற்று நோய்த் தடுப்பு அதிகாரி, சுகாதார கல்வி அதிகாரி, பிராந்திய விலங்கு விசர்நோய்த்தடுப்பு அதிகாரி ஆகியோர் கலந்துகொண்டனர். (பா)

## 'கட்அவுட்' சேதமாக்கியவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னாலுள்ள பதாகைகளை (கட்அவுட்) சேதமாக்கிய நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

ஜா-எலயைச் சேர்ந்த ஆர்.ஜி. ரொஷான் மலிந்த எனும் இந்நபர், ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் எதிரான வசனங்களை சிவப்பு நிற வர்ணத்தில் எழுதியதாக பொலிஸார் குற்றம் சுமத்தினர். மேலும் சுய தொழில் புரிவோர் சம்மேளனத்தினர் அமைத்த இப்பதாகைக்கு சேதமிழைத்த குற்றத்தையும் இந்நபர் மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட நபரை செப்ரெம்பர் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நேற்று உத்தரவிட்டார்.

## எம்பிலிப்பிட்டியாவில் ஒருவர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

எம்பிலிபிட்டிய, கெட்டகல்லாற பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10.30 அளவில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். வீட்டுக்குள் நுழைந்த மூன்று பேர் அங்கிருந்தவர்களை கயிற்றினால் கட்டிவிட்டு தங்காபரணங்களைக் கொள்ளையிட்டதோடு, வீட்டின் உரிமையாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். சம்பவத்தில் காயமடைந்த 45 வயதான நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

## புதிய வரவு செலவுத்திட்டம் ஜனாதிபதி தலைமையில் கூட்டம்



(கொழும்பு)

2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட யோசனைகள் தொடர்பில் கட்டட நிர்மாணத் துறையினரின் ஆலோச னைகளைப் பெறுவதற்கான கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது.

அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, விமல் வீரவன்ச, அநுர பிரியதர்ஸன யாப்பா, மகந்த அமரவீர, பசில் ராஜபக்ஷ, நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் உட்பட முக்கியஸ்தர்கள் பலர் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

## மாடு முட்டியது ஆட்டோ சாரதி பலி!

கட்டாக்காலி மாடு முட்டிய தில் முச்சக்கரவண்டி சாரதியொருவர் மரணமடைந்துள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளனர். நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதியில் அமைந்துள்ள அட்டப்பள்ள பிரதேசத்தைச் சேர்ந்த உதுமா லெவ்வை இப்றாஹிம் (வயது-41) என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

## குடிசனம் மீது.....

நடையுமாக வீதிகளில் திரிந்தனர். படையினர் சிவில் உடை அணிந்தவர்களாகவும், சிலர் சீருடை அணிந்தவர்களாகவும், மேலும் சிலர் கட்டைச் காற்சட்டையுடனும் காணப்பட்டனர்.

வீதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பொதுமக்களின் வாகனங்கள் மீதும் படையினர் தாக்குதல் நடாத்தினர். இத் தாக்குதலின் போது இரண்டு முச்சக்கர வண்டிகளும், ஒரு ஹையேஸ் வாகனமும் அடித்து நொருக்கப்பட்டுக் கிடந்தது. வீதிகளில் பொதுமக்களின் துவிச்சக்கர வண்டிகள் பல ஆங்காங்கே வீசப்பட்டுக்கிடந்தது.

சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு மேலதிக படையினர் வரவழைக்கப்பட்டு குறிப்பிட்ட பகுதி சுற்றிவளைக்கப்பட்டிருந்தது. இராணுவ கவச வாகனங்கள் மற்றும் இராணுவ டாங்கிகளும் கடற்கரை வீதியில் ஆங்காங்கே நிறுத்தப்பட்டிருந்தது. இராணுவத்தினரின் பிரசன்னத்தைத் தொடர்ந்து பொதுமக்கள் ஓடிச்சென்று வீடுகளுக்குள் முடங்கிக்கொண்டனர்.

அப்பகுதிக்குள் எவரும் உள் நுழையவோ, அங்கிருந்து வெளியேறிச்செல்லவோ அனுமதிக்கப்படவில்லை. நள்ளிரவு அளவில் உக்கிரநிலைமை தணிந்திருந்தது.

உத்தியோகப்பற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதைப் போன்ற நிலைமை இன்று அதிகாலை வரை நீடித்தது.

## இணுவில் குடும்பஸ்தர்....

தகரத்தினை கிளித்துக் கொண்டு உள்ளே நுழைந்து சென்று கொலை செய்துள்ளமை விசாரணைகளின் போதும் தடையங்களின் போதும் தெரியவந்தது.

## யாழ்.கலட்டி....

இவ்வாறு கைது செய்யப்பட்ட இளைஞர்கள் நேற்று நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

மேற்படி வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஆனந்தராசா கைது செய்யப்பட்ட 6 நபர்களுக்கும் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து தலா 75 ஆயிரம் ரூபா தண்டம் அறவிட்டு விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

எனினும், கணபதிப்பிள்ளை சுபாகர் (வயது-28) படுகாயமடைந்துள்ளதால் யாழ்.போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனால் நேற்று 5 சந்தேக நபர்கள் மாத்திரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எப்.எஸ்)

## இந்திய...

இந்திய அரசாங்கத்தினால் அனுப்பப்பட்ட கோடி ரூபாய் பெறுமதியான நிவாரணப் பொருட்கள், இடம்பெயர்ந்த மக்களுக்கு முழுமையாக விநியோகிக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் இந்திய அரசாங்கம் 50 ஆயிரம் வீடுகளை நிர்மானிப்பதாக அறிவித்திருந்தது.

எனினும், இதுவரையில் ஆயிரம் வீடுகளையேனும் நிர்மானித்து வழங்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கிடையில் தமிழக முதல் வர் ஜெயலலிதா ஜெயராமின் இலங்கை தமிழர்களுக்கு ஆதர வான முன்னெடுப்புகளுக்கு, சீனித் தம்பி யோகேஸ்வரன் நன்றி தெரி வித்துள்ளார்.

## யுத்தக் குற்ற....


கப்டன் ஜெயவீரவும் சமரன் குமார ராமவிக்கிரமவுடன் இணைந்து பணியாற்றியவர் என்பதுடன், வன்னிப் போரின் இறுதியில் கிடைத்த மடிக்கணினிகள் உள்ளிட்ட இலத்திரனியல் பொருட்களை போர் முனையில் இருந்து கடத்திச் சென்றபோது இவர்கள் இருவருமே இலங்கை பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சந்திரகுமார் எம்.பி....

தொலைபேசியூடாக தொடர்பு கொண்டார்.

குருநகர் நிலைமையை எடுத்து விளக்கியதுடன் பதற்றத்தைத் தணிப்பதற்கும் பொதுமக்களின் பாதிப்புக்களை தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து விசேட பொலிஸ் அதிகாரிகள் குழு ஒன்று அப்பகுதிக்கு விரைந்தது. பின்னர் அங்கு கடமையில் இருந்த படைத்தரப்பும் பொலிஸ் அதிகாரிகளும் இணைந்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இதனால் பதற்றம் தணிந்தது.



# தலைவிரித்தாடும் பதவிப் போட்டி; உள்ளூராட்சி சபைகளில் குழப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் ஆரம்ப அமர்வுகளிலேயே பதவிப் போட்டியும் உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடுகளும் தலைவிரித்து ஆட ஆரம்பித்துள்ளமையால் இந்தச் சபைகளின் நிர்வாகம் சீர்குலையும் அபாயம் தோன்றியுள்ளது.

தலைமைப் போட்டி காரணமாகவும், கருத்து வேறுபாடுகள் காரணமாகவும், ஆளும்கட்சி உறுப்பினர்களிடையே வாக்குவாதங்களும், சபை நடவடிக்கைகளைக் குழப்புவதும் அனேக மன்றங்களில் தொடர்கின்றது.

எதிர்க்கட்சி வரிசையிலிருப் போர் முன்னிலையில் நாகரீகமற்ற வகையில் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் நடந்துகொள்வதாக விசனம் முன் வைக்கப்படுகின்றது.

தேர்தலில் வெற்றிபெற்று ஒரு மாதமாகிவிட்ட போதும், இன்னும், உருப்படியாக சபையைக் கூட்டி வேலைத்திட்டங்கள் குறித்து விவாதித்து மக்களுக்குச் சேவைசெய்ய முற்படாமல் தனிப்பட்ட பிரச்சினைகளைப் பேசி சபை நடவடிக்கைகளைக் குழப்பும் கூட்டமைப்பு உறுப்பினர்களின் நடவடிக்கைகளைக் கண்டிப்பதாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறியுள்ளனர். நேற்றைய தினம் மானிப்பாய் மற்றும் சாவகச்சேரி உள்ளூராட்சி சபை நடவடிக்கைகள் ஆளும் கட்சியினரின் சீர்குழப்பத்தால் குலைந்ததாகத் தெரிய வருகின்றது.

இதற்குப் பின்னர் வல்வெட்டித்துறை, வலி மேற்கு உள்ளூராட்சி சபைகளிலும் இது மாதிரியான குழப்பங்கள் நடந்ததாகக் கூறும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள், தாம் இவர்களின் பிரச்சினைகளை வேடிக்கை பாத்துக்கொண்டிக்க முடியாது என்றும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

சபையில் அநாகரீகமாக நடந்துகொள்ளும் உறுப்பினர்கள் தொடர்பில் கூட்டமைப்புத் தலைமை உரிய நடவடிக்கை எடுப்பதோடு, மக்களுக்கு சேவை செய்யும் அதிகாரத்தை எவரும் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது என்பதை தமது உறுப்பினர்களுக்குத் தெரிவுபடுத்தவேண்டும் என்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.


## கல்வியல் கல்லூரிகளுக்கு 3500 பேர் அடுத்த ஆண்டில் அனுமதி

அடுத்த ஆண்டுக்கான தேசிய கல்வியற் கல்லூரிக்காக 3 ஆயிரத்து 500 ஆசிரியர்களை பயிறசிக்காக இணைத்துக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் தகவலை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது. தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்காக 62500 பேர் விண்ணப்பித்துள்ளனர் எனினும் அவர்களில் இருந்து 3500 பேரே தெரிவுசெய்யப்படவுள்ளதாக தேசியக்கல்வியியல் கல்லூரி சிரேஷ்ட ஆணையாளர் திஸ்ஸ ஹேவவிதாரண தெரிவித்துள்ளார். விண்ணப்பதாரிகளில் இருந்து இசெட் புள்ளிகளின் அடிப்படையிலேயே மாணவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர் அத்துடன் ஆரம்பக் கல்விக்கே அதிக ஆசிரிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர் என்றும் ஹேவவிதாதரண குறிப்பிட்டுள்ளார்.

## திருகோணமலையில் ஐரோப்பிய ஒன்றியம்

ஐரோப்பிய ஒன்றிய வர்த்தக சம்மேளனம் திருகோணமலையில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது. அதற்கான முன்னோடி நிகழ்வு திருகோணமலை புல்மோட்டை வீதி லவ்லேனில் அமைந்துள்ள ஜேக்கப் விடுதியில் நடைபெற்றது. இதன்போது திருகோணமலையைச் சேர்ந்த ஊடகவியலாளர்களின் புகைப்படக் கண்காட்சியும் சிறந்த புகைப்படபிடிப்பாளர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் ரியல் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரம கடற்றொழில் நீரியல் வளத்துறை பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே மற்றும் திருகோணமலை வர்த்தக சம்மேளனப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## புனர்வாழ்வு பெற்றவர்கள் தெற்கில் சுற்றுலா!



(கொழும்பு)


புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டு சமூகத்தில் இணைக்கப்பட்டிருக்கும் 500 முன்னாள் புலி உறுப்பினர்கள் தென்னிலங்கைக்கு எதிர்வரும் 8 ஆம் திகதி நல்லெண்ண சுற்றுலாவொன்றுக்கு செல்லவுள்ளனர்.

இவர்கள் 8 ஆம் திகதி முதல் 5 நாட்கள் தென்னிலங்கையில் தங்கியிருந்து மாத்தறை போன்ற பிரதான நகரங்களுக்கு விஜயம் செய்யவுள்ளனர். இளைஞர் விவகார அமைச்சர் டளஸ் அழகப்பெரும ஒழுங்கு செய்திருக்கும் இந்த சுற்றுலாவில் கலந்துகொள்ளும் இளைஞர், யுவதிகள் மாத்தறை - உயன் வத்த மைதானத்தில் நடைபெறவுள்ள விளையாட்டு நிகழ்ச்சிகளில் அங்குள்ள இளைஞர், யுவதிகளுடன் பலதரப்பட்ட போட்டிகளில கலந்துகொள்ளவுள்ளனர்.

அதன் பின்னர் எதிர்வரும் 11 ஆம் திகதி இவர்கள் கதிர்காமக் கந்தனை தரிசிப்பார்கள். அதன் பின்னர் மாத்தறையில் நடைபெறும் பல்வேறு களியாட்ட நிகழ்வுகளில் கலந்துகொள்வர். 12 ஆம் திகதி இவர்கள் மீண்டும் வவுனியா திரும்பவுள்ளனர்.

## சட்டவிரோத மது விற்பனை; சூத்திரதாரிக்குத் தண்டனை

(யாழ்ப்பாணம்)



மதுவரிப் பரிசோதகரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனைகளின் போது அனுமதிப் பத்திரமின்றி கள்ளு விற்ற நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதவான் நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார்.

அரியாலைப் பகுதியைச் சேர்ந்த இச் சந்தேக நபரை விசாரித்த யாழ். நீதவான் நீதிபதி ஏ.ஆனந்தராஜா சந்தேக நபருக்கு 500 ரூபா தண்டம் விதித்ததுடன், தண்டப்பணம் செலுத்தத்தவறின் ஒரு மாதம் சாதாரண சிறைவாசம் இருக்கவேண்டும் என உத்தரவிட்டார்.

(எப்.எஸ்,எஸ்)

## சர்வதேச தரத்தில் ஆறு பல்கலைக் கழகங்கள்

இலங்கை பல்கலைக்கழகங்களை சர்வதேச மட்டத்திற்கு மாற்றுவது தொடர்பிலான மாநாடு ஒன்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றது. இலங்கையின் ஆறு பல்கலைக்கழகங்களை சர்வதேச தரத்தில் முன்னேற்றுவதற்கு உயர்கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. ருஹுணு, கொழும்பு, மொரட்டுவ, களனி, பேராதெனியா மற்றும் ஜயவர்தனபுர ஆகிய பல்கலைக்கழகங்கள் இதில் அடங்குகின்றன. இவற்றின் உட்கட்டுமானம், பாடவிதானம் மற்றும் வெளிநாட்டு மாணவர்களை உள்வாங்குதல் போன்ற விடயங்கள் கவனம் செலுத்தப்பட்டு விருத்தி செய்யப்படவுள்ளது. இதனடிப்படையில் ஒரு பல்கலைக் கழகத்திற்கு 100 மில்லியன் ரூபா வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. இம் மாநாட்டில் அமைச்சின் அதிகாரிகள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதிகாரிகள், பல்கலைக்கழக உபவேந்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## இலங்கையுடனான முதல் டெஸ்ட் அவுஸ்திரேலிய அணி முன்னிலையில்



இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று 16 விக்கெட்டுகள் வீழ்த்தப்பட்டன.

இப்போட்டியின் முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய அணி 273 ஓட்டங்களைப் பெற்றது. இரண்டாவது நாளான நேற்றுக் காலை தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி, மாலை தேநீர் இடைவேளைக்கு முன்னர் 105 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் இழந்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கை அணியின் கடைசி 7 விக்கெட்டுகளும் 18 ஓட்ட இடைவெளியில் வீழ்ந்தன.

அதன்பின் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணியின் விக்கெட்டுகளும் வேகமாக சரிந்தன. நேற்றைய ஆட்ட முடிவின் போது அவ்வணி 6 விக்கெட் இழப்பிற்கு 115 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. தற்போது அவுஸ்திரேலிய அணி 283 ஓட்டங்களால் முன்னிலையில் உள்ளது. அணித்தலைவர் மைக்கல் கிளார்க் 60 ஓட்டங்களைப் பெற்றார். இலங்கை பந்துவீச்சாளர்களில் ரங்கன ஹேரத் 51 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

## புலிகளின் ஆயுதங்கள் மீட்பு

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை கட்டாச்சேனை என்ற பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது ஆயுதங்கள் மீட்பு. விசேட அதிரடிப்படையின் களுவாஞ்சிகுடி கட்டளை அதிகாரி மாரபபனவுக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது, இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. ரீ. 56 ரக துப்பாக்கிகள் 30 தோட்டக்கள், தொடர்பாடல் கருவிகளுக்காக பயன்படுத்தப்படும் அண்டனா போன்றவற்றை தாம் மீட்டுள்ளதாக விசேட அதிரடிப்படையின் உதவி காவற்துறை அத்தியட்சகர் பீ.ஜே. சில்வஸ்டர் தெரிவித்துள்ளார். புலிகளின் பழைய முகாம் இப்பகுதியில் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## பாதுகாப்பு வாகனம் மோதி பொறியியலாளர் மரணம்

அமைச்சர் ஒருவரின் பாதுகாவலர்கள் பயணித்த ஜீப் வண்டி ஒன்று கொழும்பு பொரல்லையில் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஒய்வூ பெற்ற பொறியிலாளர் ஒருவரையும் அவரது மனைவியையும் மோதிவிட்டு, தப்பிச் சென்றது. குறிப்பிட்ட வாகனத்தையும் சாரதியையும் பொரல்லை பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர். இந்த விபத்தில், ஓய்வூ பெற்ற பொறியிலாளர் உயிரிழந்துள்ளதுடன், அவரது மனைவி படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த ஜீப் வண்டி அமைச்சர் எஸ்.பீ. திஸ்ஸநாயக்காவுக்கு சொந்தமானது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 செப்ரெம்பர் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.